விலை ரூபா: 20.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 12 வெள்ளிக்கிழமை (28.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 284

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# 'இராணுவமே வெளியேறு'

# 'எங்களையும் வாழவிடு'




## கிளிநொச்சியில் நேற்று மக்கள் போராட்டம்

(சிவநகர்)

தமிழர் பிரதேசங்களில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவப் பிரசன்னத்தை குறைக்கக் கோரியும், வடக்கில் மக்களுடைய நிலங்களில் ஆக்கிரமித்திருக்கும் படையினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என வலியுறுத்தியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று கிளிநொச்சி நகரில் நடத்தியிருந்த கவனயீர்ப்புப் போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## த.தே.கூட்டமைப்பிற்கு ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

பத்திரிகை பிரமுகர்களை நேற்று அலரி மாளிகையில் வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, (19ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக போராட்டம் நியாயப்படுத்த முடியாததொன்று!

### உயர் கல்வி அமைச்சர் ஆதங்கம்

(கொழும்பு)

இலங்கை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்தை கல்விக்காக செலவழிப்பதாகவும் இது சில அபிவிருத்தியடைந்த நாடுகள் கல்விக்காக செலவளிப்பதைவிட அதிகமானதுணவும்உயர்கல்விஅமைச்சர்எஸ்.பி.திஸநாயக்க கூறியுள்ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பளமானது, ஒக்ரோபரில் வழங்க ஒப்புக்கொண்ட அதிகரிப்புடன் 83.6 சதவீதம் அதிகரித்துவிடும் எனவும் இதனால் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் வேலை நிறுத்தம் நியாயமில்லாதது எனவும் அவர் கூறினார்.

இந்த அதிகரிப்புடன் சகல படிகளுடன் சேர்த்து ஒரு (20ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி அமைச்சராக பசில் ராஜபக்ஷ?

(கொழும்பு)

கல்வி அமைச்சுப் பொறுப்பை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது சகோதரரும், தற்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷவிற்கு வழங்க தீர்மானித்துள்ளதாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் கல்வி அமைச்சின் பிரதியமைச்சராக மோகன் லால் குரே நியமிக்கப்படவுள்ளார். இலங்கையின் கல்வித்துறையில் இன்று (20ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போனோர் கிடைக்கும் வரை உண்ணாவிரதமிருந்து போராடுவோம்

### உறவுகள் நேற்று தீர்மானம்

(கிளிநொச்சி)

காணாமல் போன எமது பிள்ளைகள் கிடைக்கும் வரை சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளவுள்ளதாக காணாமல் போனவர்களின் பெற்றோர்கள், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனிடம்தெரிவித்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் காணாமல் போனவர்களின் பெற்றோர்களிடம் கலந்துரை (20ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கைக்கு ஜப்பானின் மீன்கள் நன்கொடை

(கொழும்பு)

ஜப்பானிய அரசு சுமார் 180 மில்லியன் ரூபாய் பெறுமதியான ரின் மீன்களை நன்கொடையாக இலங்கைக்கு நேற்று வியாழக்கிழமை வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் உலக உணவுத்திட்டத்தின் கீழே இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளது. வடமாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் போசாக்கு தேவையை கருத்தில் கொண்டு மதிய போசன திட்டத்திற்கு பயன்படுத்துவதற் (20ஆம் பக்கம் பார்க்க)

## எமது இனத்தின் விடுதலைக்காக போராட்டங்கள் தொடரும் - சிறிதரன்

(கிளிநொச்சி)

காணாமல் போனவர்கள் தொடர்பாக எங்கள் மக்களுக்கு ஒரு பதிலை அரசு சொல்ல வேண்டும். எங்களுடைய தாயகம் எங்களுடைய தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றையும் ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரிக்க வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

வட பகுதியில் தமிழர்களின் காணிகளை இராணுவத் தேவைக்காக சுவீகரிப்பதை கைவிடுமாறு கோரி, நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், காணாமல் போனவர்கள் தொடர்பாக எங்கள் மக்களுக்கு ஒரு பதிலை சொல்ல வேண்டும். எங்களுடைய (19ஆம் பக்கம் பார்க்க)

## பல தமிழ்க் கிராமங்கள் வரைபடத்தில் இல்லை - மனோ

(கிளிநொச்சி)

அரசாங்கம் தற்போது வட மாகாணத்திலிருந்து பல தமிழ்க் கிராமங்களை அழித்துக் கொண்டிருக்கின்றதென ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

வட பகுதியில் தமிழர்களின் காணிகளை இராணுவத் தேவைகளுக்காக சுவீகரிப்பதை கைவிடுமாறு கோரி, நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

மருதநகர், கிருஷ்ணபுரம், இரணை தீவு ஆகிய கிராமங்கள் திட்டமிட்ட முறையில் வட மாகாண வரைபடத்திலிருந்து அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தற்போது கேப்பாபிலவு கிராமம் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஐ.நா செயலருக்கு மகஜர்

(கிளிநொச்சி)

இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பரவிப்பாஞ்சான், மருதநகர், இரணைதீவு மற்றும் கிளிநொச்சி நகரம் ஆகியவற்றில் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி கிளிநொச்சி மக்களினால் ஐ.நா செயலாளர் நாயகம் மற்றும் மனித உரிமை ஆணையாளர் ஆகியோருக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்படவுள்ளது.

நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து கிளிநொச்சியில் அமைந்துள்ள அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகராலய வதிவிடப் பிரதிநிதி விக்டோரியாவிடம் மேற்படி மகஜர் கையளிக்கப்பட்டது. குறித்த 4 பிரதேசங்களிலும் வாழ்ந்த மக்களின் காணி உரிமங்கள் மற்றும் வரைபடங்கள் என்பனவும் இந்த மகஜரில் உள்ளடக்கப்பட்டுள்ளது. (ந-11)


## விற்பனைக்கு

சொந்தப் பாவனையிலுள்ள
6 Sri xxxx
தொடரிலக்கமுடைய Japan Motor Car, Datsun 120y
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776510375
(விலை 2 லட்சம்) (504)


## மின்தடை பற்றிய செய்தி

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ்அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயர்அழுத்த மின்மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் நாளை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, புத்தூர், ஆவரங்கால், வாதரவத்தை, வீரவாணி, இணுவில், மருதனார்மடம், தாவடி, சுதுமலை, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம், குருநகர், பாசையூர், பிரதான வீதி, கொன்வன் பிரதேசம், பொலிகண்டி, குஞ்சர்கடையின் ஒரு பகுதி, நவிண்டில் உடுப்பிட்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, கம்பர்மலை, தொண்டைமனாறு ஒரு பகுதி ஆகிய இடங்களி லும்,நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5.30 மணி வரையும் கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு,புத்தூர்,ஆவரங்கால், வாதரவத்தை, வீரவாணி, உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம்,யாழ்மாநகர சபைப்பகுதி, யாழ் பட்டணப்பகுதி ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார்கோவிலடி,ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, கொழும்புத்துறை, பாசையூர், குருநகர், மந்திகை, சாரையடி, தம்பசிட்டிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, பருத்தித் துறை நகரப்பிரதேசம்ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந-8)


YAALH ENGLISH ACADEMY
வழங்கும்
'EASY ENGLISH'
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
விபரங்கள் + பெயர் பதிவு : 773 212 711 மூலம்

செல்லா சினிமா- யாழ்ப்பாணம்
இன்று முதல்



விஜய் தயாரிப்பில்
சியான் விக்ரம், அனுஷ்கா, எமி ஜக்சன், சந்தானம்
மற்றும் பலர் நடிப்பில்
தாண்டவம்
D.T.S
10.30, 2.30, 6.30, 9.30


## வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று இரதோற்சவம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுரஆழ்வார் ஆலய இரதோற்சவ பெருவிழா இன்று நடைபெறுகின்றது.

காலை 7 மணிக்கு வசந்தமண்டப பூசையுடன் உற்சவம் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து 9 மணியளவில் வல்லிபுர ஆழ்வார் அழ கிய சித்திரத்தேரிலே திருவீதியுலா வரும் அருட்காட்சியையும் அடியார்கள் கண்டு தரிசிக்க முடியும். (ந-8)

## "துர்க்காபுரம்"

### ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் ஆலயம், படித்த மகளிர் திட்டம், மிருசுவில்.



அம்பிகை அடியார்களே!

நாளைய தினமானது எமது ஆலயத்தில் அருள் வாக்களிக்கும் தாயானவள் வாள் ஏறும் நிகழ்வும் காலை 10 மணிக்கு இந்த அம்பிகையினுடைய வரலாறுகள் அடங்கிய பக்திப்பாடல் வெளியீட்டு விழாவும் அதனைத் தொடர்ந்து பிரபல பாடகர் "சாந்தன்" அவர்களுடைய இன்னிசைக் கீதங்களும் இடம்பெற இருக்கிறது. எனவே பக்த அடியார்கள் யாபேரும் வருகை தந்து அம்பிகையின் பக்திப்பாடல் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பித்து வாள் ஏற்ற நிகழ்வின் அருட்கடாச்சத்தையும் பெற்றுச் செல்லும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
ஆலய தர்மகர்த்தா
சிவத்திரு சி. நவரத்தினம் ஐயா

(508)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

2012 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கிளி/ நாகேந்திரா வித்தியாலய மாணவியான செல்வி இராசகுமார் நிலோஜிதா 157 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். எமது பாடசாலைக்கும் எமது கிராமத்திற்கும் பெருமையினைத் தேடித் தந்த இம் மாணவியையும் கற்பித்த ஆசிரியையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.



**செல்வி இராசகுமார் நிலோஜிதா**
**157 புள்ளிகள்**

வாழ்த்துவோர் :
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
மாதர் கிராம முன்னேற்றச் சங்கம்
கமக்காரர் அமைப்பு
கிராம அபிவிருத்திச் சங்கம்,
கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.

நாகேந்திரபுரம், புளியம்பொக்கனை

(C-1171)

## பாராட்டுகளும் வாழ்த்துக்களும்



யா/ மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் தரம் 5 கல்வி கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்று எமக்கு பெருமை தேடித் தந்த
**செல்வி தட்சணாமூர்த்தி அபிராமி**
அவர்களையும் அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
சித்தி, சித்தப்பா
ஈழகேசன் குடும்பம் (லண்டன்)

சக்கோட்டை பிள்ளையார் கோவிலடி,
வட மத்தி.

(C-1173)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

2012 தரம் 5 புலமைப் பரிசில் பரிட்சையில் சித்தியடைந்து, எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவச் செல்வங்களாகிய



மாரியசேவியர் மாரிஸ்ரன்
161 புள்ளிகள்



தேவராசா பிரியதனுஜன்
148 புள்ளிகள்

ஆகிய இருவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் 100 புள்ளி களுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. ர. ரயித்தயா | - 147 | 5. அ. மேரி ஜதுர்ஷனா | - 126 |
| 2. வி. நிருபன் | - 146 | 6. யே. சுபாங்கன் | - 118 |
| 3. யு. மேரி லக்சிகா | - 142 | 7. யூ. யஸ்ரின் சேகர் | - 101 |
| 4. ஜெ. ஜென்சிகா | - 132 | | |

ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

மற்றும் இவர்களுக்கு கற்பித்த வகுப்பாசிரியர், அதிபர், ஆசிரியர்கள், மேலதிக வகுப்புக்களை நடாத்தி சிறந்த பெறுபேற்றை பெற வழிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை

(C-1167)

## மரண அறிவித்தல்

## ஆறுமுகம் வேலும்மயிலும்

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)



புலோலி மேற்கு திருநாவலூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வேலும்மயிலும் அவர்கள் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) 26.09.2012 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சின்னம்மா தம்பதியரின் புதல்வரும் காலம்சென்ற பண்டிதர் பொன்னையா நல்லம்மா (ஆசிரியரின்) அன்பு மருமகனும் வசந்தாதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை-யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)அன்புக் கணவரும், நந்தகுமார் (ஆசிரியர்-மு/வித்தியானந்தா கல்லூரி), சுகந்தி (கனடா), ஜெயந்தி (நிறைவேற்று உத்தியோகத்தர் இலங்கை வங்கி வவுனியா புதுக்குளம் விரிவாக்கக் கிளை) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் ராசமணியின் சகோதரரும், சுகிர்தா (ஆசிரியை-செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை), பாலச்சந்திரன் (கனடா), மயூரன் (அலுவலக உத்தியோகத்தர் PEC ) ஆகியோரின் அன்பு மாமனும், புருசோத்தமன், மாதுளன், தனுஸ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் வேலுப்பிள்ளை, திருச்செல்வம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), பராசக்தி, விக்னேஸ்வரன் (கனடா), ஜெயதேவி, சோமாஸ்கந்தன் (பிராந்திய மருந்துக் களஞ்சியர் சுகாதாரப் பணிமனை-வவுனியா), சிவகௌரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் 30.09.2012 ஞாயிறு காலை 10.30 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி மேற்கு,
திருநாவலூர்.

தகவல்: குடும்பத்தினர்

(507)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### வாழும் வழி

"யாராவது எதையாவது சொல்லி விட்டுப் போக ட்டும்; நாம் எதுவும் பேசாமல் கேட்டு விட்டு இருப்போம்" என்று நினைப்பவர்கள் இருக்கிறார் கள்.

அரிசோனாவில் ஒரு பல்கலைக்கழகம் இருக் கிறது. அங்கே ஒரு விஞ்ஞானி இருக்கிறார். அவர் என்ன சொல்கிறார் தெரியுமா?

வாழ்க்கையை அதன் போக்கிலே ஏற்றுக் கொண்டு, ஓய்வாக இருப்பது தான் நல்லது.

அதிகமாக ஆசைப்படுகிறவர்கள், அவசரப்படு கிறவர்கள், பொறுமை இல்லாதவர்கள்– இவர்க ளுக்கெல்லாம் இருதயநோய் அதிகமாக வருகி றது. இப்படிப்பட்டவர்களுக்கு இருதயநோய் கார ணமாக மரணம் ஏற்படுவதற்கு அபாயம் இரண்டு மடங்கு அதிகம் என்று அந்த விஞ்ஞானி கூறி யுள்ளார்.

இதேவேளை, பலபேருக்கு அகால மரணம் ஏற்படுவதற்குக் காரணமே தூற்றும் மனப்பா ன்மை– கோபமாகும். அதுமட்டுமல்ல... அடிக்கடி கோபமடைகிறவர்கள் சுறுசுறுப்பாக இருக்க மாட்டார்கள்; சோர்ந்து போய் இருப்பார்கள்; இளம் வயதிலே வயது முதிர்ந்த தோற்றம் ஏற்பட்டுவிடும்.

மூளையை எவ்வளவிற்கு சுறுசுறுப்பாக வைத் துக் கொள்கிறோமோ அவ்வளவிற்கு இளமை யாக இருக்கலாம். வைத்தியர்களும் இதைத் தான் கூறுகிறார்கள்.

இன்னொரு விடயம்; மனிதனுக்கு வயதாகும் இரகசியம் மூளையிலேதான் இருக்கிறது. அத் துடன் ஒரு மனிதன் 60 வயதை அடையும் போது மூளை சுருங்கி தளர்ச்சி அடைகிறது என்று மேற்கு ஜேர்மன் விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.

இப்படி தளர்வு அடைய விடாமல் மூளையை சுறுசுறுப்பாக வைத்திருந்தால் எப்போதும் இள மையாக இருக்கலாம் என்று அவர்கள் கூறுகி றார்கள்.

மூளையை எப்போதும் சுறுசுறுப்பாக வைத் திருப்பதற்கு என்ன வழி?

கோபப்படக்கூடாது; மற்றவர்களுக்கு விரோ தமாக, இடையூறாக நடக்கக்கூடாது. வாழ்க்கை யிலே நிதானம் தேவை; உற்சாகம் வேண்டும்; அறுபது வயதானாலும் மனம் சந்தோசமாக இருக்க வேண்டும்.

அதற்காகத்தான் திருமணம் முடிந்து அறுபது வருடங்கள் நிறைவு பெற்றதும் "அறுபதாவது கல்யாணம்" என்ற ஒரு நிகழ்வைச் செய்து தம்ப திகளை உற்சாகப்படுத்துகிறார்கள் போலுள்ளது.

கவலை இல்லாமல் இருக்கக் கற்றுக் கொண் டால், உடல் நிலையும் சீராக இருக்கும். மனமும் நிம்மதியாக இருக்கும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இந்தியப்பயணம் எதிர்பார்த்ததைவிட திருப்திகரமாக அமைந்தது- ஜனாதிபதி

(கொழும்பு)

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் பிரதானிகளுக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையி லான வழமையான சந்திப்பு நேற்று காலை நடைபெற்றுள்ளது.

இன்றைய சந்திப்பில் இலங்கை யில் நீதித்துறை எதிர்கொள்ளும் அழுத்தங்கள், நீதித்துறையுடனான மோதல்கள் குறித்து பத்திரிகை ஆசி ரியர்களுடன் விரிவாக கலந்துரை யாடப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி தேர்தல் முறைமை, ஜனாதிபதியின் இந்திய பயணம் குறித்தும் பேசப்பட்டுள் ளது. தேர்தல் முறைமை குறித்து பேசுகையில், விருப்பு வாக்கு முறைமை குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டதாகவும் எதிர்வரும் காலத்தில் விருப்பு வாக்குமுறை மையினை இல்லாது செய்வது குறி த்து பேசப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

ஜனாதிபதியின் இந்தியப் பய ணம் குறித்து பேசுகையில், தாம் எதிர்பார்த்ததை விட இந்திய பய ணம் திருப்திகரமாக அமைந்திருந்த தாகவும் இந்தியா, இல ங்கை ஆகிய நாடுகளுக் கிடையிலான உறவு முறை மிகவும் சிறந்த முறை யில் அமைந்துள்ளதாக வும் ஜனாதிபதி குறிப்பிட் டுள்ளார்.

அத்துடன் கிழக்கு மாகாண சபைத் தேர்த லில் ஆளும் அரசு வெற்றி பெற்றமை குறித்து மகி ழ்ச்சி வெளியிட்ட ஜனாதிபதி இதனை ஒரு சிறந்த சுவிஷேசமான வெற் றியாக கருதுவதாகவும் ஜனநாயக ரீதியில் நடைபெற்ற இந்த தேர்த லில் மக்கள் சுதந்திரமாக வாக்களி த்து இந்த அரசினை ஆதரித்துள் ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## ஆறாயிரத்துக்கும் குறைவான வாக்குகளை பிள்ளையான் பெற்றுள்ளார்

### கருணா கூறுகிறார்

முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு ஆறாயி ரத்துக்கும் குறைவான வாக்குகளை பெற்றதாக பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரியிடம் முறையிட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள உயர் அதிகாரிகள் சிலரின் உத்தரவுக்கு ஏற்ப மட்டக்களப்பு செயலக அதிகாரிகள் சிவநேசதுரை சந்திர காந்தனின் விருப்பு வாக்குகளை 22 ஆயிரமாக அதிகரித்த தாகவும் முரளிதரன் கூறியுள்ளார்.

விருப்பு வாக்குகள் அதிகரிக்கப்பட்ட விடயத்தை ஊடகவிய லாளர்களிடம் கூற வேண்டாம் என தனக்கு நெருக்கமான அதிகாரிகள் வலியுறுத்தியதாகவும் பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் கூறியதாக இராஜதந்திரி ஒருவரை மேற் கோள்காட்டி கொழும்பு தகவல் ஒன்று கூறுகின்றது. (அ-2)

## பொந்தர் கிராமத்தில் மீளக்குடியமர்வு

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவின் முகமாலை கிராம சேவையாளர் பிரிவின் பொந்தர் குடியிருப்பு கிராமமக்கள் மீள் குடியேற்றம் எதிர்வரும் முதலாம் திகதி இடம்பெறவுள்ளது. அன் றைய தினம் காலை10 மணிக்கு தற்போது தற்காலிகமாக வசிக்கும் இடங்களிலிருந்து பதிவுகளை நீக்கிய ஆவணங்களுடன் மீள்குடியேற் றத்திற்கு வருகை தருமாறு அக்கிராமமக்களை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (அ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 70 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 70 |
| தக்காளி | 30 | 30 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 80 | 60 | 60 |
| கரட் | 80 | 80 | 110 |
| பூசணி | 40 | 30 | 50 |
| புடோல் | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 70 | 75 |
| பெரிய வெங்காயம் | 70 | 50 | 60 |
| பாகற்காய் | 100 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 80 |
| பயற்றங்காய் | 60 | 70 | 60 |
| லீக்ஸ் | 90 | 100 | 90 |
| பீற்றூட் | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 60 | 70 | 120 |
| முருங்கைக்காய் | 45 | 40 | 40 |
| போஞ்சி | 70 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 70 | 100 | -- |
| கீரை – 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 200 | 210 | 320-400 |
| தேங்காய் (ஒன்று) | 30-40 | 30 | 27-30 |

## இராசி பலன்

*28.09.2012*
*(புரட்டாதி 12, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*
*திரயோதசி முற்பகல் 8.47 மணிவரை*
*சதயம் பிற்பகல் 2.26 மணிவரை*
*இராகுகாலம் 10.32-12.02 மணிவரை*
*சுபநேரம் 6.02-7.32 மணிவரை*
*வல்லிபுர ஆழ்வார் தேர்,*
*நடேசர் அபிஷேகம்.*

**மேடம்** ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்க வர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும், தொழில் வளர்ச்சி மேலோங்கும்.

**இடபம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், சமுதாயத்தில் உயர்ந்த நிலை க்கு வரத் தோன்றும், சொல்லை செயலாக்கி காட்ட முன்வருவீர் கள், பிறர் உதவியுண்டு.

**மிதுனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், வேலைச்சுமை குறையும், ஆரோக்கி யத்தில் அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண்பீர் கள், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவா கும், மருத்துவச் செலவு கூடும், திருடர் பயமுண்டு.

**சிங்கம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சொந்த பந்தங்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், புதிய திட்டங்களை எளி தாக நிறைவேற்றுவீர்கள், பயணங்க ளால் பலனுண்டு.

**கன்னி** இனத்தார் பகை மாறி இன்பங்கள் கூடும் நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், மறைமுகப் போட்டிகள் மாறும், சுவாரஸ்யமான நாள்.

**துலாம்** பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கொள் கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், சிவாயநம என்று சொல்லி சிறப்ப டைய வேண்டிய நாள்.

**விருச்சிகம்** வாகன சுகமுண்டு, பணத்தேவைகளை நிறைவேற்ற நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், வழிபாட்டால் மகிழ்ச்சியு ண்டு, வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**தனுசு** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகம் அடையும் நாள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும், தெய்வானுகூலமுண்டு.

**மகரம்** அதிர்ஷ்டகரமான நாள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பண வரவு திருப்தி தரும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், புகழ் கூடும்.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற விஷ் ணுவை வழிபட வேண்டிய நாள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நன்மை தரும், உறவினர் வருகையால் சில செலவுகள் ஏற்படலாம்.

**மீனம்** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், தூரதேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒருங்கிணைப்பு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் சிறுவர் நலன் பேணலும் பெற்றோரின் மனப்பாங்கும் என்ற தலைப்பிலான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் திட்ட நிபுணர் ஜெ.தற்பரன் பேச்சாளராக கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், அரச திணைக்களங்கள், பிரதேச சபைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புக்கள் சார்ந்தோரை கலந்து கொள்ளுமாறு இவ்வமைப்பு கேட்டுள்ளது. (அ-9)

# வாகனங்களை கழுவியபோது மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

வாகனங்களைக் கழுவிக் கொண்டிருந்த இளைஞன் மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளான்.

இப் பரிதாபகரமான சம்பவம் நேற்றுக் காலை சங்கரத்தை துணைவிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் மல்லாவி அனுஞ்சியன்குளத்தைச் சேர்ந்த கந்தசாமி திருக்குமரன் (வயது 29) என்பவரே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

மல்லாவி அனுஞ்சியன் குளத்தைச் சேர்ந்த இளைஞன் தொழில் நிமித்தம் சங்கரத்தையில் வசித்து வந்ததோடு அங்கேயே வேலையிலும் ஈடுபட்டு வந்துள்ளார்.

நேற்றுக்காலை பக்கோ இயந்திரத்தைக் கழுவிக் கொண்டு இருந்தபோது மோட்டார் மின்சாரம் இவ் இளைஞனை தாக்கியுள்ளது.

நீரில் நனைந்த நிலையில் காணப்பட்ட இளைஞன் மோட்டார் மின்சாரம் பலமாக தாக்கவே சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான்.

ஃேவிஸ்செய்யும் இயந்திரத்திலிருந்துவெளியேறிய மின்னாரம் தண்ணீருக்குள் இவ் இளைஞன் நின்றதாலேயே மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாகவும் தெரியவருகின்றது. (அ-4)

## யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு மூன்று மோப்ப நாய்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் நிலைய விசேட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவிற்கு 3 மோப்ப நாய்கள் பொலிஸ் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது.

இம்மோப்பநாய்கள்கொலை,கொள்ளை, திருட்டு மற்றும் ஏனைய பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கும் புதைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களை இனங்கண்டு கொள்வதற்கேற்ப பயிற்சியளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம் மூன்று மோப்ப நாய்களும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு உள்ளதோடு அங்குள்ள வல்லுநர்களாலேயே பயிற்சியளிக்கப்பட்டும் உள்ளது. (அ-4)

## முதியோர் சங்கத்தின் ஓராண்டு நிறைவு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் ஓராண்டு நிறைவு நாளும் சிறப்பு நிகழ்வுகளும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெறுகிறது என்பதை சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (அ)

# கடற்கரை வீதி பாலத்தை புனரமைக்கக்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)



துரையப்பா விளையாட்டரங்கை அடுத்துள்ள குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள பாலம் நீண்ட காலமாக புனரமைக்கப்படாதுள்ளது.

இதனால் அப் பாலத்தினூடாக பயணிப்போர்மரண பீதியோடு பயணிக்க வேண்டியிருப்பதாக அப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பாலத்தினூடாக யாழ்.நகரின் பிரதான கால்வாய் செல்வதனாலும் அப்பகுதி துர்நாற்றம் வீசுகின்றது.

இவ் வீதி 30 வருடங்களாக புனரமைக்கப்படாமல் காணப்படுவதால் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது. இப் பாலம் அமைந்துள்ள வீதிக்கு காப்பெற் இடப்பட்டுள்ள போதும் பாலம் திருத்தியமைக்கப்படவில்லை. குருநகர் மற்றும் அதனையண்டிய பிரதேசங்களில் உள்ளோர் யாழ்.நீதிமன்றுக்கு செல்வதற்கும் பண்ணைப் பகுதிகளுக்கு செல்வதற்கும் குறித்த வீதியினையே பயன்படுத்தி வருகின்றனர். மழை காலத்திற்கு முன்னராவது முற்றாக சேதமடைந்துள்ள பாலத்தினை திருத்தியமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-4)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை இரத்த வங்கி பிரிவினரால் நடத்தப்படும் நடமாடும் இரத்ததான முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் ஒரு மணி வரை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை சிகிச்சை நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இரத்ததான நிகழ்வில் அப் பிரதேசத்தில் உள்ள குருதி கொடையாளர்கள், இளைஞர்கள், யுவதிகள் குருதி கொடுத்து உயிர் காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இரத்த வங்கி வைத்திய அதிகாரி எஸ். சிந்துஜா கேட்டுக் கொண்டுள்ளார். இச்சேவை மாவட்ட வைத்திய அபிவிருத்தி சபை சமூகத்தின் ஏற்பாட்டிலும் கலை, கலாசார இலக்கிய மன்றத்தின் அனுசரணையிலும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. (அ)

## கடையிற் சுவாமிகள் குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

அருட்குரு கடையிற் சுவாமிகளின் 121 ஆவது குருபூசைத்தினம் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரநாதர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளதாக கடையிற் சுவாமிகளின் சிவன் அடியார்கள் அறிவித்துள்ளனர். (அ-9)

# காணிப்பயன்பாடு குறித்த விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

காணிப்பயன்பாடு தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்றும் நேற்று முன் தினமும் காணித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ்.அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்திலுள்ள காணிகளின் பயன்பாடு தொடர்பாக பிரதேச செயலர்கள் மற்றும் காணிப் பயன்பாட்டு உத்தியோகத்தர்களிடம் கேட்டறிந்து கொண்ட காணித் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட உயரதிகாரிகள் குழுவினர் காணிகளின் பயன்பாடுகள் தொடர்பான விளக்கத்தினையும் அவர்களுக்கு வழங்கியிருந்தனர்.

அரச காணிகள், தனியார் காணிகள், விவசாய நிலங்கள், கால்நடை மேய்ச்சல் நிலங்கள் என்பனவற்றின் பயன்பாடுகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டன.(அ-6)

## கலந்துரையாடல் திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலய பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் தொடர் 9 நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யா/இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

மேற்படி கலந்துரையாடலானது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மேற்படி பாடசாலையில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

## ஞானச்சுடர் வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய சந்நிதியான் ஆச்சிரமத்தின் மாதம் தோறும் வெளிவரும் ஆன்மீக சஞ்சிகை ஞானச்சுடர் புரட்டாதி மாத இதழ் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வெளியிடப்படும்.

இச் சஞ்சிகையின் வெளியீட்டுரையை சமாதான நீதவான் சிவ.ஆறுமுகசாமியும் மதிப்பீட்டுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தியும் வழங்குவர். (அ-35)

# வலி.தெ/மே/பி.சபையில் உப கட்டடக்குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் உப கட்டடக்குழுத் தெரிவு நேற்று இடம்பெற்றது. பெரும் அமளிதுமளிக்கு மத்தியில் இடம்பெற்ற இத்தெரிவில் இந்த உப குழுவின் தலைவராக உறுப்பினர் க.கௌரிகாந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

5 உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவில் ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தனர். கட்டட அனுமதிகளை பொதுமக்களின் நன்மை கருதி விரைவாக வழங்குவதற்காக இந்தக்குழு தெரிவு இடம்பெற்றுள்ளது.

இவ்வாறானதொரு உபகுழு தெரிவு செய்யப்படுவது சட்டவிரோதமானது எனத் தவிசாளர் அ.ஜெபநேசன் கூட்டத்தில் தெரிவித்திருந்தார். ஆனாலும் உப குழுத் தெரிவுக்கான பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டு வெற்றிபெற்றதையடுத்து உள்ளூராட்சி ஆணையாளருக்கு குழுவினை அங்கீகரிப்பதா இல்லையா? என்ற முடிவிற்காக கூட்ட அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-6)

## விஞ்ஞான தினம்

(யாழ்ப்பாணம்)

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் விஞ்ஞான தினம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரிக் கலையரங்கில் கணித விஞ்ஞான மன்ற தலைவர் ர.நிதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினர் யாழ். பல்கலைக்கழக விவசாய உயிரியல்துறை தலைவர் கலாநிதி கு.திருக்குமரன், சிறப்பு விருந்தினர் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் சி.கேதீஸ்வரன், பழைய மாணவன் சி.நித்தியரூபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

விந்தை இறுவெட்டுக்கான மதிப்பீட்டு உரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் சி.கேதீஸ்வரன் வழங்குவார். (அ)




## தமிழ்மொழித் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தமிழ்மொழித் தினம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக தமிழ் மாமணி தமிழருவி த.சிவகுமாரன் கலந்து கொள்வார்.

ஆசியுரையினை கல்லூரி முதல்வர் வீ.கணேசராசா வழங்குவார். கலைநிகழ்வில் மாணவர்களின் சிந்து நடைக்கூத்தும் இடம்பெறும். (அ)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி தனியார் கல்வி நிறுவனங்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட வேண்டியுள்ளதால் சகல தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறும் ஒன்றியத்தில் பதிவு செய்து கொள்ளாத நிறுவனங்களை பதிவு செய்யுமாறும் தென்மராட்சி தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் அறிவித்துள்ளது. (அ-9-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுங்கேணி வைத்தியசாலைக்கு வைத்தியரை நியமிக்க நடவடிக்கை

## நாமல் எம்.பி.உறுதி

(முல்லைத்தீவு)

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு தமிழ்மொழி பேசும் வைத்தியரை நியமிக்க நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபஷ உறுதியளித்துள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக கட்டடத் திறப்பு விழாவிற்கு வருகைதந்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலினை அடுத்து மேற்படி வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிப்பதாக உறுதியளித்துள்ளார்.

குறித்த வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியரை நியமித்து 24 மணி நேரமும் வைத்தியசாலையை இயக்குவதற்கு வவுனியா சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பல தடவைகள் அப்பகுதி மக்கள் முறையிட்டதுடன் வேறுபல அரச அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியும் பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் அப்பிரதேச மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிற்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இம்மக்களின் மேற்படி வைத்தியசாலையின் குறைபாடுகளைக் கேட்டறிந்து கொண்ட அவர் விரைவில் தமிழ் பேசுகின்ற வைத்தியர் ஒருவரை நியமித்துத் தருவதாக உறுதியளித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 22 கிராம சேவையாளர் பிரிவிலும் சுமார் 3 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இவ்வைத்தியசாலையானது சகல வசதிகளுடனும் அமைந்து காணப்படுகின்றது. தினமும் 250 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் வந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் தினமும் 5 தொடக்கம் 10 பேர் தங்கி இருந்து சிகிச்சை பெற்றும் வருகின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் தலையீட்டினால் ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர் பற்றாக்குறை, தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையின் வைத்திய பற்றாக்குறை என்பன நிவர்த்தி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9-267)

YARL Properties
(புதிய பரிமாணத்துடன் சிறந்த சேவை)
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919
யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் Brown வீதியில் 3 1/2 பரப்பு காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளுங்கள்
விற்றல், வாங்குதல் (Sales/Buy)
வாடகை (Rent)
பராமரிப்பு (Property Managment)
அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள்
36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்
E-Mail - yarlproperties@gmail.com

# களஉதவியாளர்கள் 10 பேருக்கு நியமனம்

யாழ்.மாவட்ட நில அளவை கள உதவியாளர்கள் 10 பேருக்கான நியமனப் பத்திரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நேற்றுமுன்தினம் அவரது செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் மேற்படி உதவியாளர் களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்ட நிலையில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கமைவாக இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (அ-2)

# பாம்பு தீண்டி உயிரிழந்த மாணவி புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

(யாழ்ப்பாணம்)

பாம்பு தீண்டி உயிரிழந்த சிறுமி புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி உள்ளார்.

இம் மாணவி உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி கற்று இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சையிலும் தோற்றி உள்ளார்.

விஜிதன் டயானி என்ற குறித்த சிறுமி இடப்பெயர்வின் காரணமாகவே உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்துள்ளார்.

இங்கு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றியதன் பின்னர் மீள்குடியமர்த்தப்பட்ட தனது சொந்த இடமான ஆனந்தபுரம் புதுக்குடியிருப்புக்குச் சென்றுள்ளார்.

அங்கு கடந்த 8 ஆம் திகதி பாம்பு தீண்டி குறித்த சிறுமி உயிரிழந்துள்ளார்.

தற்போது புலமைப்பரிசில் பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் குறித்த சிறுமி 153 புள்ளிகளைப்பெற்று சித்தியெய்தி உள்ளார்.

இத்துயர சம்பவத்தின் நினைவுகளால் பாடசாலைச் சமூகமும் அவரது குடும்பத்தினரும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். (அ-4)

# சட்ட ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்கும் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்கள் பதிவு செய்வதற்குமான நடமாடும் சேவைகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பிலிருந்து வரும் ஆட்பதிவுத் திணைக்களத்தினாலும் மாவட்ட உதவிப் பதிவாளர் நாயகத்தினாலும் மாவட்ட உதவிப் பதிவாளர் நாயகத்தினாலும் நடத்தப்படவுள்ள இச் சேவையில் மக்களை பங்கு கொண்டு பயன்பெறுமாறு பிரதேச செயலர் எம்.முரளிதரன் அறிவித்துள்ளார். (அ-9-6)

## கரைச்சி வடக்கு

# க.தொ.கூட்டுறவு சங்கத்திற்கு நிரந்தர கட்டடம் இல்லை

(ஆனையிறவு)

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திற்கு நிரந்தர கட்டடம் இன்மையால் மிகுந்த சிரமங்களுடன் அலுவலகத்தில் கடமையாற்றி வருவதாக அலுவலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி சமாசமானது தற்பொழுது புளியம்பொக்கணைச் சந்தியிலுள்ள ஒரு கடைத் தொகுதியில் இயங்கி வருகின்றது. இக்கடைத்தொகுதியில் தேநீர்க்கடை ,பலசரக்குக்கடை என்பனவும் இயங்கி வருகின்றன.

இவ்வாறு கடைகளுக்கு மத்தியில் அலுவலகம் இயங்குவதால் தமக்கு அலுவலகக் க டமைகளை ஒழுங்காக செய்ய முடியவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்தகால யுத்த இடப்பெயர்வுக்கு முன்னர் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் புளியம் பொக்கணைச் சந்திக்கு அருகாமையில் இவ்வலுவலகம் நிரந்தர கட்டடத்தில் இயங்கி வந்தது.

யுத்தத்தினால் இக்கட்டடம் முற்றாக அழிவடைந்த நிலையிலேயே தற்காலிகமாக கடைத்தொகுதியில் இயங்கி வருகின்றது.

எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக கவனமெடுத்து நிரந்தர கட்டடமொன்றை மிக விரைவில் அமைத்துத் தருமாறு சமாச அலுவலர்களும் கடற்றொழிலாளர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர். (அ-9-264)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
விமலராஜன் துஸ்மிதா



யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவி வி.துஸ்மிதா புலமைப்பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையிட்டு அவரை மனதார வாழ்த்துகின்றோம். அத்துடன் அவர் கல்வியில் மென்மேலும் சிறப்படைய பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துபவர்கள்:-
சித்தப்பா, சித்தி,
அப்பம்மா, அப்பப்பா
கௌதமி பேக்கரி,
A.P லேன், முஸ்லிம் தெரு,
யாழ்ப்பாணம்.
(502)

மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு:- 1982 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-கார்த்திகை 4
உயரம்:-6'1"
கி.பா:-29.5, 4 இல் செவ்.
தொழில்:-லண்டன் B/454

பிறப்பு:- 1976 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- உத்தரம் 3
உயரம்:-5'6"
கி.பா:-37, 4 இல் செவ்.
தொழில்:- அரச ஆசிரியர் B/455

பிறப்பு:-1979 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-உத்தராடம் 2
உயரம்:-5'4"
கி.பா:-51
தொழில்:-வெப் டிசைனர் கணனி
B/456

பிறப்பு:- 1979 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-கேட்டை 2
உயரம்:-5'9"
கி.பா:-3.5
தொழில்:- UK மாணவ விசா
B/457

**மணமகன் தேவை**

பிறப்பு:- 193 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- பரணி 3
உயரம்: 5'3"
கி.பா:-11 G/537

பிறப்பு:- 1986 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- ரேவதி 2
உயரம்: 5'1"
கி.பா:-16
தொழில்: வங்கி உத்தியோகத்தர்
B.Com AAT G/539

பிறப்பு:- 1979 இந்து வேளாளர்
நட்சத்திரம்: உத்தரம் 3
உயரம்: 5'4"
கி.ப்ா: 59, 1 இல் செவ்.
தொழில்:-கணனி ஆசிரியை
(தனியார் நிறுவனம்) G/547

பிறப்பு:- 1968 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- உத்தராடம் 4
உயரம்: 5'4"
கி.பா:- 79.25
எதிர்பார்ப்பு:-விவாகரத்துப் பெற்ற வரும் ஏற்கப்படும்.
G/548

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்வுக்கு வீட்டுக்கொரு வீட்டுத்தோட்டம்

## காய்கறிகளும் அவற்றின் போசணையும் 02

சத்தான சுத்தமான காய்கறிகளையும் பழங்களையும் பெறுவதற்கு எவ்வாறு வீட்டுத் தோட்டம் அமைப்பது? சென்ற தொடரில் நிலத்தை எவ்வாறு தயார் செய்வது, இடவசதி குறைந்தவர்கள் பயிர்களை நடுவதற்கு எவ்வாறு இடத்தை தெரிவு செய்வது பற்றி எழுதி இருந்தேன். இனி பயிர்களை நடுகை செய்வது எவ்வாறு?



பயிர்களை நடும்போது இருமுறைகளில் நடலாம்: ஒன்று நேரடியாக விதைகளை தோட்ட நிலத்தில் நடுவது, மற்றையது நாற்றுமேடைகளில் நடுகைசெய்து பின் தோட்டத்தில் மீள் நடுகை செய்வது. நாற்றுமேடை அமைத்தல் பெரியவிடயம் இல்லை. தனியாக ஒரு இடத்தில் சிறிய மேடை அமைத்து விதைகளை போட்டு பயிரை வளர்த்தல். குறிப்பிட்ட நாட்களின் பின் நாற்று வளர்ந்ததும் அதைப் பிடுங்கி எடுத்து ஒதுக்கப்பட்ட நிலத்தில் நடுகைசெய்யலாம். நாற் நடுவதற்கு 2-3 நாட்களுக்கு முதல் ஒதுக்கப்பட்ட நிலத்தின் மண்ணை நன்கு தளர்வாக்கி பண்படுத்தி சரியான இடைவெளிகளில் குழிகளை தயார்செய்தல் வேண்டும். நாற்றின் வேர் பாதிப்படையாமலும் தண்டு சேதமடையாமலும் பிடுங்கி தயார் செய்த குழிகளில் நடுதல் வேண்டும்.

மீள் நடுகை செய்யும் பயிர்களை மாலை வேளைகளில் நடுதல் வேண்டும். நடுகை செய்தபின் நீர்பாய்ச்சுதல் அவசியம். நடும் போது பயிர்களிடையே ஊட்டச்சத்துக்கு போட்டி

| பயிர்கள் | இடைவெளி | |
|---|---|---|
| | வரிசைகளுக்கிடையில் | நாற்றுக்கிடையில் |
| கத்தரி | 90cm | 60cm |
| பயற்றை (கொடி) | 90cm | 30cm |
| பயற்றை (செடி வர்க்கம்) | 60cm | 20cm |
| பாகல் | 1.5cm | 1m |
| பூசணி | 2.5cm | 2.5m |
| புடோல், பீர்க்கு, கெக்கரி | 1.5cm | 1.5m |
| சிறகவரை | 75cm | 60cm |
| பசளி | 45cm | 45cm |
| கரட் | 25cm | 5-10cm |
| வெண்டி | 90cm | 60cm |
| தக்காளி | 80cm | 50cm |
| கறிமிளகாய் | 40cm | 40cm |
| கோவா | 50cm | 40cm |
| மிளகாய் | 60cm | 45cm |
| முள்ளங்கி | 30cm | 10cm |
| போஞ்சி | 50cm | 40cm |



ஏற்படாதவாறு பயிர்களிடையே போதிய இடைவெளி விட்டு நடுதல் வேண்டும். மீள்நடுகைக்கான நாற்றுக்கள் செழுமையான தண்டுகளையும் நன்கு வளர்ச்சியடைந்து 3-4 இலைகளையும் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் நோய் பூச்சி தாக்கம் அற்ற ஆரோக்கியமான நாற்றுக்களாகவும் பூசணி, வெண்டி, பாகல், புடோல், பீர்க்கு, கெக்கரி, பயற்றை, பசளி, சிறகவரை, முள்ளங்கி, போஞ்சி, கரட், கீரைகள் போன்றவற்றுக்கு நேரடி நடுகை முறையை பயன்படுத்தலாம். மிளகாய், கத்தரி, தக்காளி, கறிமிளகாய், கோவா, வெங்காயம் போன்றவற்றுக்கு நாற்றுமேடைகளை பயன்படுத்தலாம்.

பூசணி போன்ற நிலத்தில் படரும் கொடிகளை நடும்போது அவை படர்ந்து வளர போதிய இடைவெளி விட்டு நடுதல் வேண்டும். பாகல், புடோல் போன்ற கொடிகளை நடும் போது அவற்றுக்கு பந்தல் (2m உயரம்) அமைக்கலாம். அல்லது வேலிகள், மதில்களில் படரும் வகையில் நடலாம். அத்துடன் பிரதான கொடியின் அடியில் உருவாகும் கிளைகளை அகற்ற வேண்டும். பயற்றை, போஞ்சி சிறகவரை, கொடிகளுக்கு 2m உயரமான தடியை எல்லா கொடிகளுக்கும் ஊன்றி அவற்றுக்கிடையே வேலி போன்று கயிறு கட்டி அதில் படர விடலாம்.

முள்ளங்கி, கரட் போன்ற பயிர்களின் விதைகளை நடும்போது வரிசைகளில் 1 cm ஆழத்துக்கு ஐதாக விதைகளை இட வேண்டும். முள்ளங்கி விதைகள் முளைத்து 1-2 வாரங்களின் பின்னர் 10 cm இடைவெளியிலும் கரட் விதைகள் முளைத்து 3-4 வாரங்களில் 5-10 cm இடைவெளியிலும் நாற்றுக்களை மீதப்படுத்தி ஏனைய நாற்றுக்களை அகற்றி விட வேண்டும். கீரை விதைகளை ஐதாக இடுவதற்கு விதைகளை மண்ணுடன் சேர்த்து இடுதல் மிகவும் சிறந்தது.

தோட்டத்தில் எல்லா இடங்களுக்கும் சென்று வர போதிய இடைவெளிவிட்டு பயிர்களை நடுதல் மிகவும் நன்று. இது நாம் விளைவிக்கும் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கும் பயிர்களின் வளர்ச்சியை கண்காணிக்க நடந்து செல்வதற்கும் உதவும்.

நீண்டகால காய்கறிகளான முருங்கை, அவரை, பழவகைகளான பப்பாசி, மாதுளை, பலா, கொய்யா, தேசி, தோடை, மூலிகைகளான கற்பூரவள்ளி, இஞ்சி, மஞ்சள், சிறுகுறிஞ்சா, கறிவேப்பிலை போன்றவற்றையும் நாம் வீட்டுத் தோட்டத்தில் பயிரிடலாம்.

தினமும் சிறிதுநேரம் பயிர்களுடன் செலவழிக்க வேண்டும். பயிரில் ஒவ்வொரு இலை வரும் போதும் உள்ளம் ஆனந்தக் கூத்தாடும். அப்பயிரில் ஒரு பூ பூத்துவிட்டால் கேட்கவா வேண்டும்? அவ் இன்பத்தை அனுபவித்து பார்த்தால்தான் புரியும்.

சத்யா.கோடீஷ்
3ஆம் வருட மாணவி,
விவசாயபீடம்.

# தமிழக பயண எச்சரிக்கை குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழகத்திற்கான பயண எச்சரிக்கை தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழகத்திற்கான பயண எச்சரிக்கையை தளர்த்துவது தொடர்பில் இது வரையில் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. தமிழகத்திற்கான பயணங்கள் தொடர்பில் இலங்கை தொடர்ந்தும் கண்காணிக்கப்படுகிறது.

பயண எச்சரிக்கையை தளர்த்துவது குறித்து இதுவரையில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

தமிழகம் செல்லும் இலங்கையர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதனைத் தொடர்ந்து வெளிவிவகார அமைச்சு பயண எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டதனை தொடர்ந்து தமிழகத்திற்கு விஜயம் செய்யும் இலங்கையர்களின் எண்ணிக்கையில் பாரியளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதா [illegible] கிறது. (அ-2)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய
மாணவி கி.ஸ்ரீசிவானி புலமைப்பரிசில்
பரீட்சையில் 158
புள்ளிகளைப் பெற்று சித்தி
யடைந்தமையிட்டு அவரை மனதார
வாழ்த்துவதுடன்
அவர் கல்வியில் மென்மேலும் சிறப்படைய
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:-
அம்மம்மா ப.அன்னலட்சுமி,
கோதா அன்ரா,
அக்கா, அண்ணாமார்

கதிரகம்
கோவில் வீதி,
நல்லூர்

# தெரிவுக் குழுவிற்குள் வந்தும் தீர்வு கிடைக்காவிட்டால் எதிர்க்கலாம்

## அமைச்சர் ராஜித கூட்டமைப்புக்கு ஆலோசனை

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக தேசிய பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட அறிக்கை ஆறு மாதங்களில் வெளியிடப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் இடம் பெற தயக்கம் காட்டுவது ஏன் என்று புரியவில்லை என மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத் தெரிவுக்குழு விவகாரம் மற்றும் தேசிய பிரச்சினை தீர்வுத்திட்ட விவகார்ரம் குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். பாராளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக ஆறு மாதங்களில் தீர்வுத்திட்ட அறிக்கை வெளியிடப்படாவிடின் அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது எதிர்ப்பை வெளி யிட முடியும். தமது பக்க நியாயத்தை வெளிப் படுத்தவும் முடியும்.

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் ஆளும் கட்சியினால் நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெறவேண்டும் என்று பரவலாக கோரப்பட்டு வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்து கொள்ள வேண்டும் என்று நானும் அழைப்பு விடுக்கின்றேன். காரணம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக தேசிய பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட அறிக்கை ஆறு மாதங்களில் வெளியிடப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒரு விடயமே கூட்டமைப்புக்கு போதுமானது.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் கலந்து கொண்ட பின்னரும் ஆறு மாத காலத்தில் தீர்வுத்திட்ட அறிக்கை வெளியிடப்படாவிடின் அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது எதிர்ப்பை வெளியிட முடியும். தமது பக்க நியாயத்தை வெளிப்படுத்தவும் முடியும். இதனை நானும் ஏற்றுக் கொள்கின்றேன் என்றார். (அ-2)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள
பாலங்கள், மதகுகள் புனர் நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல்- வீதி அபிவிருத்தி
அதிகார சபை
திருத்தம்

15.09.2012 ஆம் திகதி வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி கோரல் விளம்பரத்தில் கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் நடைமுறை 28.09.2012 ஆம் திகதி (இன்று) 10.00 மணியுடன் முடிவடைந்து 28.09.2012 ஆம் திகதி (இன்று) 10.00 மணிக்கு திறக்கப்படும் என்பதை 01.10.2012 ஆம் திகதி 10.00 மணியுடன் முடிவடைந்து உடனே திறக்கப்படும் என மாற்றி வாசிக்கவும்.

(ஜ/A168)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீதியான சமூக கட்டமைப்பை உருவாக்க ஒன்றிணையுங்கள்

## ஐ.தே.க.பிரதித் தலைவர் சஜித் அழைப்பு

(கொழும்பு)

நீதிமன்றின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்த மக்கள் அணிதிரள வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாத்தாண்டிய பிரதேச புனித அந்தோனியார் தேவாலயமொன்றுக்கு நன்கொடை வழங்கிய சந்தர்ப்பத்தில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுப்பிடுகையில்,

நாட்டில் நீதிமன்றக் கட்டமைப்பின் மீது அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. நீதிமன்றம் மீது தாக்குதல் நடத்தும் காலமிது.

நீதிமன்றக் கட்டமைப்பின் மீதான அழுத்தம் குறித்து நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். எல்லோரும் எதிர்பார்க்கும் நீதியான ஓர் சமூகக் கட்டமைப்பை உருவாக்க முடியாத நிலையில் உருவாகியுள்ளது.

பாடசாலை மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரையில் நியாயத்தை வேண்டி நீதிமன்றின் உதவியை நாட வேண்டியுள்ளது. இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் பொதுப் பணத்தை கொள்ளையிடுகின்றனர்.

நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச் செல்கின்றனர். நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதி செய்ய அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென அவர் தெரிவித்தார். (அ-2)

# முஸ்லிம் மக்களின் வாக்குகள் அரசுக்கு விற்கப்பட்டுள்ளன

## ஹக்கீம் பதிலளிக்க வேண்டும் என்கிறார் சம்பந்தன்

(கொழும்பு)

முஸ்லிம் மக்களின் ஜனநாயக உரிமை மீறப்பட்டமைக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் பதில் கூறியே ஆக வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிழக்கு மாகாண சபை தேர்தல் முடிபுகள் குறித்த கலந்துரையாடல் ஒன்றின் போது சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு கிழக்கு மாகாண சபைக்கு தெரிவான உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட சம்பந்தன் வெற்றிலைச்சின்னத்தில் போட்டியிடுவது அவமானம் என்பதாலேயே மரச்சின்னத்தில் போட்டியிடுவதாக மக்களிடம் தெரிவித்தே ரவூப் ஹக்கீம் வாக்குகளை வென்றார்.

ஆனால், மக்கள் ஜனநாயக ரீதியாக அவரை மதித்து முஸ்லிம் காங்கிரசுக்கு வழங்கி இருந்த வாக்குகள் அனைத்தையும் ஜனநாயக தீர்ப்பினையும் மீறி அரசாங்கத்துக்கு விற்றிருக்கிறார். இதற்கு ஹக்கீம் தகுந்த பதிலை வழங்க வேண்டி இருக்கும் என்று தெரிவித்துள்ளார். (அ-2)

## வடமத்திய மாகாண சபையில்

# பிரேமலால் மட்டுமே எமக்கு முதலமைச்சர்

## உள்ளூராட்சி உறுப்பினர்கள் கூறுகிறார்கள்

(கொழும்பு)

வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சர் பதவி தொடர்பான சர்ச்சை நிலைமை நீடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமத்திய மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திசாநாயக்கவைத் தவிர வேறு எவரது தலைமையையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த 90 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இவ்வாறு முன்னாள் முதலமைச்சருக்கு ஆதரவை வெளியிட்டுள்ளனர்.

மாகாணசபை விவகாரங்கள் தொடர்பில் புதிய முதலமைச்சருக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்ற போதிலும் அநுராதபுர மாவட்டத்தின் சுதந்திரக்கட்சித் தலைவராக பேர்டி பிரேமலால் திசாநாயக்கவைத் தவிர வேறு எவரையும் ஏற்றுக்கொள்ள முடியாது என குறிப்பிட்டுள்ளனர்.

பேர்டி பிரேமலால் எடுக்கும் சகல தீர்மானங்களுக்கும் தாம் ஆதரவளிக்கப் போவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

பேர்டி பிரேமலால் போன்ற கட்சியின் சிரேஷ்ட தலைவரை கட்சியின் உயர்பீடம் கவனிக்கும் நடவடிக்கை திருப்தி அளிக்கும் வகையில் இல்லை என சுட்டிக்காட்டியுள்ளனர்.

பேர்டி தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் காரணமாக கட்சித் தலைமை வருந்த நேரிடும் எனவும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.




★1066-முதலாம் வில்லியம் இங்கிலாந்தை முற்றுகையிட்டான்.

★1448-முதலாம் கிறிஸ்டியன் டென்மார்க் மன்னனாக முடிசூடினான்.

★1687-கிரேக்கத்தின் பழங்காலக் கட்டடம் பார்த்தினன் குண்டு வெடிப்பில் சேதமடைந்தது.

★1708-ரஷ்யாவின் முதலாம் பீட்டர் மன்னன் சுவீடன் படைகளை லெஸ்னயா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தான்.

★1791-பிரான்ஸ் ஐரோப்பாவில் யூதர்களை அடிமைத்தளையில் இருந்து விடுதலையான முதலாவது நாடானது.

★1795-யாழ்ப்பாணத்தை ஜெனரல் ஸ்டுவேர்ட் தலைமையிலான பிரித்தானியப் படைகள் கைப்பற்றின.

★1867-டொரொண்டோ ஒண்டாரியோவின் தலைநகரமாகியது.

★1867-ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவைக் கைப்பற்றியது.

★1889-நிறை மற்றும் அளவைகளுக்கான பொது மாநாட்டில் மீற்றரின் நீளமானது பனிக்கட்டியின் உருகுநிலையில் 10 விழுக்காடு இரிடியம் கலந்த பிளாட்டினம் கலவையின் கோள் ஒன்றின் இரண்டு கோடுகளிற்கிடையேயான நீளத்துக்கு சமனாக அறிவிக்கப்பட்டது.

★1895-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தற்போதைய கட்டடம் கட்டப்பட்டது.

★1928-அலெக்சாண்டர் பிளெமிங் பென்சிலினைக் கண்டுபிடித்தார்.

★1939-நாசி ஜேர்மனியும் சோவியத் ஒன்றியமும் போலந்து நாட்டை தமக்குள் பங்குபோட உடன்பட்டன.

★1939-இரண்டாம் உலகப் போர்: போலந்தின் தலைநகர் வார்சா ஜேர்மனியிடம் வீழ்ந்தது.

★1944-இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவப்படைகள் எஸ்தோனியாவில் இருந்து நாசிகளின் குளூகாவதை முகாமை விடுவித்தன.

★1950-இந்தோனேசியா ஐ.நா.வில் இணைந்தது.

★1958-பிரெஞ்சு ஐந்தாவது குடியரசு அமைக்கப்பட்டது.

★1960-மாலி, செனெகல் ஆகிய நாடுகள் ஐ.நா.வில் இணைந்தன.

★1961-டமாஸ்கசில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் பின்னர் எகிப்து, சிரியா ஒன்றியமான ஐக்கிய அரபுக் குடியரசு முடிவுக்கு வந்தது.

★1994-பால்ட்டிக் கடலில் சுவீடன் சென்று கொண்டிருந்த எஸ்தோனியப் பயணிகள் கப்பல் மூழ்கியதில் 852 பேர் கொல்லப் பட்டனர்.

★1995-பொப் டெனார்ட் மற்றும் சில கூலிப் படைகள் கொமரோஸ் தீவுகளைக் கைப்பற்றின.

★2005- ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடை செய்தது.

### பிறப்புக்கள்

★1852-ஹென்றி முவாசான், பிரெஞ்சு வேதியியல் அறிஞர் (இ.1907)

★1929-லதா மங்கேஷ்கர், இந்தியப் பின்னணிப் பாடகி

★1947-ஷேக் ஹசீனா, வங்காளதேசத்தின் முன்னாள் பிரதமர்

★1982-அபினவ் பிந்திரா, இந்திய ஒலிம்பிக் வீரர்

★1982-எமெக்கா ஒக்ஃபோர், அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

★1895-லூயி பாஸ்டர், பிரெஞ்சு அறிவியலாளர் (பி.1822)

★1953-எட்வின் ஹபிள், அமெரிக்க வானியலாளர் (பி.1889)

★1956-வில்லியம் போயிங், அமெரிக்க வான்வெளி முன்னோடி (பி.1881)

★1970-கமால் அப்துல் நாசர், எகிப்திய ஜனாதிபதி (பி.1918)

★1978-பாப்பரசர் முதலாம் அருளப்பர் சின்னப்பர் (பி.1912)

★1989-பேர்டினண்ட் மார்க்கொஸ், பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி (பி. 1917)

★1994-கே.ஏ.தங்கவேலு, தமிழ் நகைச்சுவை நடிகர்

### சிறப்பு நாள்

★உலக வெறிநோய் தினம்

### எட்வின் ஹபிள்



எட்வின் பாவெல் ஹபிள் எனும் முழுப்பெயர் கொண்ட எட்வின் ஹபிள் ஒரு புகழ் பெற்றவானியலாளர்ஆவார். இவரது தந்தையார் மிசூரியில்உள்ளமாஷ்ஃபீல்ட் என்னுமிடத்தில் ஒரு காப்புறுதித்துறை அலுவலராக இருந்தார்.

எட்வின் ஹபிள் இளமைக் காலத்தில் சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்தார். அக்காலத்தில் இவர் கல்வித் திறமையிலும் பார்க்க விளையாட்டுத் திறமைக்காகவே பெயர் பெற்றிருந்தார்.

இவர் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் கணிதம், வானியல் என்பவற்றைக் கற்று 1910 இல் இளநிலைப் பட்டம் பெற்றார். ஒக்ஸ்ஃபோட்டில் முதுநிலைப் பட்டம் பெற்ற பின்னர் அமெரிக்காவுக்குத் திரும்பினார். ஆரம்பத்தில் இவர் இந்தியானாவின் நியூ அல்பனியில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியாராகவும் கூடைப்பந்துப் பயிற்சியாளராகவும் பணிபுரிந்தார்.

முதலாம் உலகப் போரில் இராணுவ சேவையில் சேர்ந்த இவர் விரைவில் மேஜர் தரத்துக்கு உயர்ந்தார். 1917 ஆம் ஆண்டில் இவர் முனைவர் பட்டம் பெற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலை. மாணவர்கள் இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கம்பஹா- இம்புல்கொட பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக தெரிய வருவதாவது,

குறித்த வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்தில் மோதி ஏற்பட்ட விபத்தில் அதில் இருந்த இரு மாணவர்களும் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் றுஹுணு பல்கலைக்கழக மாணவர்கள் எனவும் நாட்டில் பல் கலைக்கழக மாணவர்கள் தற்போது மேற்கொண்டு வரும் ஆர்ப்பாட்டங்களுக்கு முன்நின்று உழைப்பவர்கள் எனவும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (அ-2)

# கனடாவில் குடிவரவாளர்களால் குற்றச் செயல்கள் அதிகரிப்பு

## குற்றவாளிகளை நாடுகடத்த பாராளுமன்றில் சட்டம்

வெளிநாடுகளிலிருந்து அகதிகளாகவும் குடிவரவாளர்களாகவும் கனடாவிற்கு வந்து இங்கு பல குற்றச் செயல்களில் ஈடுபட்டும் கடும் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்களான பலரை உடனடியாக கனடாவை விட்டு நாடுகடத்தும் சட்டம் விரைவில் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

மேற்படி சட்டத்தை கனேடிய பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்த சக பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஆதரவைத் தருமாறு கனடாவின் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமைகள் அமைச்சர் ஜெய்சன் கென்னி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு, கனேடியர்களைப் பாதுகாப்பதற்காக நாம் இந்த நடவடிக்கையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். அதற்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் தேவை. இந்த சட்டத்தை அமுல் செய்வதன் மூலம் நாம் பல நல்ல பலன்களைப் பெறமுடியும்.

ஏற்கனவே கடும் குற்றவாளிகள் என்று அடையாளம் காணப்பட்டு நாடுகடத்தல் உத்தரவைப் பெற்றவர்கள் பலர் கனடாவின் தாராள போக்கு கொண்ட சட்டங்கள் காரணமாக மீள்முறையீடு செய்து காலத்தைக் கடத்திய வண்ணம் கனடாவின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கின்றார்கள்.

தொடர்ந்து கடும் குற்றச் செயல்களில் ஈடுபட்ட வண்ணம் அப்பாவிகளான கனேடியர்களை பயமுறுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

கனடாவிற்கு குடிவரவாளர்களாக வெளிநாட்டவர்கள் வருவதை நாம் அனைவரும் விரும்புகின்றோம். ஆனால் கடும் குற்றவாளிகளும் சட்டங்களை மீறும் அரச விரோத நடவடிக்கைகளில் குற்றவாளிகளாக காணப்படுகின்றவர்களும் கனடாவிற்கு வருவதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் தெரிவித்தார்.

அத்தோடு நியாயமானவர்களும் நேர்மையாளர்களுமான புதிய குடிவரவாளர்களை கனடாவிற்கு அழைக்கும் வகையில் தற்போது உள்ள சில தடைகளை அகற்றுதல் போன்றவை இந்த புதிய சட்டத்தில் அடங்கும்.

அமைச்சர் ஜெய்சன் கென்னி மேற்படி சட்ட மூலம் கனேடிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களை அதை ஆதரித்து நமது கனேடிய தேசத்தை கடும் குற்றவாளிகளின் பிடியிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (அ-2)

# பஹ்ரேனுக்கான தூதரகம் விரைவில்

(கொழும்பு)

பஹ்ரேனுக்கான இலங்கை தூதரகத்தை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள் ளார். பஹ்ரேனில் சுமார் 50ஆயிரம் இலங்கையர்கள் பணியாற்றுவதாக செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிதாக ஆரம்பிக்கப்படும் தூதரகத்தின் ஊடாக தொழில் வாய்ப்புகள் மேம்படுத்தப்படுவதுடன் பலதரப்பட்ட விடயங்கள் முன் னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதேவேளை, நைஜீரியாவிலும் இலங்கை தூதர கமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பில் பேசுவோம்

## இந்திய பயணம் குறித்து சுரேஷ்

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. வடக்கின் உயர் பாதுகாப்பு வலயங்களை இல்லாதொழிக்க இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துமாறு இந்திய மத்திய அரசாங்கத்திடம் கோரத் திட்டமிட்டுள்ளதாக கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இந்திய தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள், இந்திய அரசாங்கப் பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளனர். எவ்வாறான விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவது என்பது தொடர்பில் நிகழ்ச்சிநிரல் ஒன்று தயாரிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வலிகாமம் வடக்குப்பிரதேசத்தைச் சேர்ந்த 28 ஆயிரம் பொதுமக்கள் உயர்பாதுகாப்பு வலயங்களின் காரணமாக இன்னமும் சொந்த இடங்களில் மீள்குடியேற முடியாது காத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். எனவே, இந்த விடயம் குறித்து இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

### மேல் மாகாண சுகாதார திணைக்களத்தில்

# டெங்கு நோயாளர் குறித்து குறுந்தகவல் பரிமாற்றம்

வைத்தியசாலையில் இருக்கும் டெங்கு நோயாளர்கள் தொடர்பான தகவல்களை குறுந்தகவல் மூலம் குறித்த பகுதியின் சுகாதார வைத்திய அதிகாரிக்கு தெரியப்படுத்தும் முறையொன்று மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இந்தத்திட்டத்தின் ஊடாக டெங்கு நோயாளர்கள் தொடர்பான தகவல்கள் தாமதமின்றி பெற்றுக் கொள்ளப்பட்டு நோய் பரவுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென திணைக்களத்தின் பணிப்பாளர் அமல் ஹர்ச டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெறும் வைத்தியசாலையின் வைத்தியரால் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு நோயாளர் தொடர்பிலான தகவல்கள் குறுந்தகவல் மூலம் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

நீர்கொழும்பு பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடைமுறை வெற்றியளித்ததால் அதனை ஏனைய பகுதிகளிலும் முன்னெடுக்கத் தீர்மானித்ததாக அவர் குறிப்பிட்டார்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுகாதார சேவைகளை இலகுவான முறையில் மேற்கொள்ளவுள்ளதாக திணைக்களம் தெரிவிக்கின்றது. (அ-2)

# ஒக்டோபர் 15 இற்கு இடையில் அமைச்சரவையில் மாற்றம்

அமைச்சரவையில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில் கல்வி, உயர்கல்வி, பெற்றோலியம் போன்ற சில அமைச்சு பொறுப்புகளில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சரவை மாற்றத்தின் போது அனைத்து அமைச்சுக்களிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படாது எனவும் பிரதமர் பதவியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம் எனவும் அவர் கூறியுள்ளார். அதேவேளை இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திஸாநாயக்கவின் மகனும் பிரதியமைச்சருமான துமிந்த திஸாநாயக்கவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படுமெனவும் அந்தப் பேச்சாளர் கூறியுள்ளார். (அ-2)




மன்னார் முள்ளிக்குளத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் எந்த ஒரு வசதிகளற்ற காட்டுப்பகுதிக்குள் காயக்குழி எனும் இடத்தில் வசித்து வருகின்றனர். அங்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

54

கி.பி. 1003 ஆம் ஆண்டு இராஜராஜசோழன் இலங்கைமீது படையெடுப்பு நடாத்தி வெற்றிகொண்டான். இந்தியாவிலிருந்து இக்கரைக்கு வந்து நிலைமைகளை அவதானித்துத் திரும்பிய ஒரு குதிரை வியாபாரி. சோழமன்னனிடம் இலங்கையின் பரிதாபநிலையை எடுத்தியம்பினான். இதனைக்கேள்வியுற்ற சோழ மன்னன் (இராஜராஜன்) இலங்கையை சோழரின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரும்நோக்குடன் பெரும் சைனியம் ஒன்றினை அனுப்பி வைத்தான். சோழமன்னனாகிய முதலாம் இராஜராஜசோழன் அனுராதபுரத்தின் மீதான படையெடுப்பினை எதிர்கொள்ள முடியாத இலங்கை அரசனான ஐந்தாம் மகிந்தன் உருகுணைக்குத் தப்பி ஓடினான். கி.பி. 1017 ஆம் ஆண்டு இராஜராஜசோழனின் மகனான இராஜேந்திரசோழன்



வானவன் மாதேவி ஈஸ்வரம்- பொலநறுவை


# சோழராட்சியில் இலங்கை

பெரும்படையுடன் வந்து மகிந்த மன்னனைச் சிறைப்பிடித்து சிறைக் கைதியாக சோழநாட்டிற்குக் கொண்டு சென்றான். மகிந்தனின் சிறைப்படுத்தலோடு இலங்கை சோழரின் ஆட்சிக்குட்பட்டது.

சோழப்படை இலங்கையில் இறங்கி, எதிர்ப்பட்ட கிராமங்களை அடக்கி, உருகுணை நோக்கி நகர்ந்தது. அங்கு கரைந்துறைந்த மகிந்தனையும் மகாராணியை அவளது அனைத்து தங்க ஆபரணங்களுடனும் மகுடம், விலை மதிப்பில்லாத வைரங்கள், அரச வாள், பதக்கங்கள் என்பற்றையும் கவர்ந்து கொண்டான். நாட்டிற்குள் மறைந்திருந்த மன்னனையும் சமாதான உடன்படிக்கை செய்வதாக ஏமாற்றி சிறைப்படுத்திக் கொண்டனர். சிறைப்பட்ட அரசனையும் கவர்ந்த திரவியங்களையும் சோழ நாட்டிற்கு அனுப்பி வைத்தனர் என்கிறது சூளவம்சம். சோழரின் படை இலங்கையில் ஆக்கிரமிப்புப் படையாகவே நடந்து கொண்டது எனச் சூளவம்சத்திலிருந்து அறிய முடிகின்றது. தந்ததாது கோயிலைச் சோழர்கள் அழித்தனர். விகாரைகளிலுள்ள தங்கச்சிலைகளையும் ஆபரணங்களையும் சூறையாடினர்.

அவர்கள் புலத்தி நகரைத் (பொலநறுவை) தம் தலை நகராக்கிக் கொண்டு தங்கினர். இதுவரை காலமும் இலங்கையின் தலைநகராகவிருந்த அனுராதபுரம் சோழ்ராட்சியில் தனது முக்கியத்துவத்தினை இழந்தது. அவர்கள் பொலநறுவையைத் தம் தலை நகராக்கிக் கொண்டனர். எனினும் அனுராதபுரம் இலங்கையின் தலைநகராக விளங்கிய கால கட்டத்தில் பொலநறுவை பல்வேறு முக்கிய அம்சங்கள [illegible] தொடங்கியது. பொலநறுவைப் பிரதேசத்தில் நீர்ப்பாசன வசதிகள், பயிர்ச் செய்கை அபிவிருத்திக்குத் தூண்டுதலாக இருந்தன. பயிர்ச் செய்கை துரித அபிவிருத்தி அடைந்தமையால் மக்கள் பொலநறுவைப் பிரதேசத்தில் குடியேற்றங்களை உருவாக்கினர். பொலநறுவை இலங்கையின் இராணுவ கேந்திரமையத்தில் அமைந்திருந்தது.

உருகுணைப்பிரதேசம் மலையதேசம் என்பவற்றினைக் கட்டுப்படுத்தி பொலநறுவையிலிருந்து ஆட்சிசெய்ய வாய்ப்பாக இருந்தது. இலங்கை மன்னனுக்கு எதிராகக் கலகம் செய்யும் இளவரசர்கள் உருகுணையிலிருந்தே செயற்பட்டனர். அவர்களைக் கட்டுப்படுத்த பொலநறுவை தகுந்த இடமாக விளங்கியது. பொலநறுவையிலிருந்து உருகுணையைக் கட்டுப்படுத்த முடிந்தது. உருகுணையிலிருந்து வரும் படையெடுப்புகளை முறியடிக்க பொலநறுவை ஏற்ற இடமாக விளங்கியது. மூன்றாம் அக்கபோதி, நான்காம் அக்கபோதி, ஐந்தாம் சேனன் ஆகிய அரசர்கள் அனுராதபுரத்திலிருந்து ஆண்டனர்.




நோயாளிகளின் மூலிகை சாறு நிரப்பி வைக்கப்பட்டும் மருத்துவத் தொட்டி - பொலநறுவை

எனினும் அவர்கள் வசிப்பதற்காக பொலநறுவையில் மாளிகைகள் கட்டியிருந்தார்கள். பொலநறுவை அனுராதபுரத்து மன்னர்களின் போர்ப்பாசறையாக விளங்கியது. அதனால் பொலநறுவையைப் பாசறை நகர் என்பர்.

இலங்கையில் உருகுணை தவிர்ந்த பிரதேசங்கள் சோழரின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. ராஜரட்டையில் அவர்களின் அதிகாரம் மிகுந்திருந்தது. சோழப்பேரரசு மும்முடிச்சோழ மண்டலம் என்ற நாமத்தோடு விளங்கியது. அதன் ஒரு பகுதியாக இலங்கை இணைக்கப்பட்டிருந்தது. யுத்தத்தினால் பாழடைந்துவிட்ட அனுராதபுரத்தைப் புனர்நிர்மாணம் செய்யாது அவர்கள் பொலநறுவையைத் தலைநகராகிக் கொண்டனர். அதற்கு ஜனநாதமங்கலம் எனப் பெயரிட்டனர். புலத்திநகர் என்றும் அழைக்கப்பட்டது. சோழர் ஆட்சிக்காலத்தில் தமிழர்களின் சார்பான சடங்குகளும், அச்சடங்குகளில் பிராமணர்களின் செல்வாக்கும் இந்துமதக் கிரியைகளும் காணப்பட்டன. வேளக்காரப்படை என்ற மன்னனின் மெய்க்காவல் படை இவர்கள் காலத்திலேயே ஆரம்பமாகியது. பிற்காலச் சிங்கள மன்னர்களும் வேளக்காரப் படைகளைக் கொண்டிருந்தனர். சோழராட்சிக்காலத்தில் இலங்கையில் சைவக் கோயில்கள் பல அமைக்கப்பட்டன. முக்கியமாக சிவன் கோயில்கள் நிறைய நாடெங்கும் கட்டப்பட்டன. பௌத்தத்தையும் சோழமன்னர்கள் ஆதரித்தனர். திருகோணமலைக்கு அருகிலுள்ள வெலகம்வெகர என்ற விகாரை சோழ மன்னனின் ஆதரவைப் பெற்றிருந்தது. சோழர் அதனைத் திருத்தியமைத்து இராஜராஜப் பெரும்பள்ளி என்றழைத்தனர். பொலநறுவையில் இன்று இரண்டாம் சிவதேவாலயம் எனப் பெயரிட்டழைப்பது, அக்காலத்தில் இராஜராஜசோழனால் வானவன் மாதேவி ஈஸ்வரம் எனப்பெயரிடப்பட்டிருந்தது.


(தொடரும்)



கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா



இராஜராஜ சோழனின் மகன் இராஜேந்திர சோழனின் ஆட்சிக்கால வெள்ளி நாணயம்



அரசர்களின் சந்திப்பு மண்டபம் -பொலநறுவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு தனது பெரும்பான்மையை பயன்படுத்தி தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்

## தெரிவுக்குழு தேவையில்லை என்கிறார் கிரியெல்ல

(கொழும்பு)

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரப் பரவலாக்கல் மேற்கொள்ளப்பட மாட்டாதென பங்காளிக் கட்சிகளுடன் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளார். இது மீறப்பட்டால் ஆட்சி கவிழும் என்று ஐ.தே.கவின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்திற்கு பெரும்பான்மை பலம் உள்ளது. எனவே, தீர்வை வழங்க முடியும். இதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு தேவையில்லை.

யுத்தம் இடம்பெற்றபோது அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திர முன்னணியுடன் ஜனாதிபதி உடன்படிக்கையொன்றை கையெழுத்திட்டார்.

இதில் யுத்தம் வெற்றி கொண்ட பின்னர் 13 ஆவது திருத்தம் இரத்து செய்யப்படுமென்றும் அதிகாரப் பரவலாக்கலை வழங்கமாட்டோமென்றும் உறுதியளிக்கப்பட்டது.

எனவேதான் அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கலை வழங்குவோம் என்றும் அதற்குமேல் பதின்மூன்று பிளஸ் வழங்கப்படுமென்றும் இந்தியாவை கடந்த காலங்களில் ஏன் இன்றும் ஏமாற்றி வருகிறது.

ஆனால், ஒருபோதும் அது வழங்கப்படமாட்டாது. காலத்தை வீணாக்குவதே அரசாங்கத்தின் திட்டமாகும். அதற்காகத்தான் பாராளுமன்ற தெரிவுக் குழுவை அரசு அமைக்க முயற்சிக்கின்றது.

யுத்தத்தை நடத்தாது அழிவுகளை தடுத்து அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்வதற்கே ஐ.தே. கட்சி ஆட்சிக்காலத்தில் நடவடிக்கைகள்முன்னெடுக்கப்பட்டது. ஆனால், அம் முயற்சி தடுக்கப்பட்டது.

யுத்தத்தை நடத்தி அழிவுகளுக்கு பின்னரே அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கலை வழங்குவோமென பொய்யான வாக்குறுதிகளை வழங்கி வருகிறது. ஐ.தே.க. இந்தியாவிடம் மண்டியிடாது தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்க முன் வந்தது.

ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று இந்தியாவிடம் மண்டியிட்டுள்ளார். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண பாராளுமன்ற தெரிவுக்குழு அவசியமில்லை. 17 ஆவது திருத்தம் இரத்துச் செய்யப்பட்ட போது எதிர்க்கட்சிகளிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டதா? இல்லை.

மாறாக அரசுக்குள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி 17 ஆவது திருத்தம் இரத்துச் செய்யப்பட்டது. எனவே, இந்தப் பெரும்பான்மையை பயன்படுத்தி தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றார். (அ-2)

# சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிராக சட்ட கட்டமைப்பு தேவை

## கூட்டுப்படைகளின் கட்டளைத் தளபதி

(கொழும்பு)

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கூட்டுப் படைகளின் கட்டளைத் தளபதி எயர் சீப் மார்ஷல் ரொசான் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத இல்லாதொழிப்பு தொடர்பில் அண்மையில் கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மற்றும் சர்வதேச ரீதியான பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க சர்வதேச ரீதியில் கடந்த காலங்களை விடவும் செயற்றிறனான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிராக சட்டக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சினால் இந்த கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் படையதிகாரிகள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். (அ-2)

# சம்பள அதிகரிப்பின்றேல் போராட்டம் வெடிக்கும்

## தே.தொழிற்சங்க மத்திய நிலையம் அறிவிப்பு

நடைபெறவுள்ள வரவு செலவு திட்டத்திற்கு முன்பாக அரச ஊழியர்களின் சம்பளம் ரூபா 13,442.50 சதத்தால் அதிகரிக்கப்படாவிட்டால் தொழிற்சங்கப் போராட்டத்தை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அதன் ஏற்பாட்டாளர் சமந்த கோறளே ஆராய்ச்சி இவ்வாறு தெரிவித்துள்ளார். இதற்காக பல்வேறுபட்ட தொழிற்சங்கங்களுடன் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (அ-2)


## வட.இ.ச.சபைப் பரீட்சைகள்-2013

வட.இ.ச.சபையின் 2013 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பப்படிவங்கள் 01.10.2012 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவுத் திகதி 05.12.2012 ஆகும். விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தலுடன் ரூபா (ஐம்பது) 50/- மட்டும்.

விண்ணப்பப் படிவத்தை தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 65/- பெறுமதியான காசுக்கட்டளை (மணிஓடர்) உடன் சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் கடித உறையை வட.இ.ச.சபைக் காரியாலயத்திற்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைக் கட்டணத்தை சபையினால் வழங்கப்படும் படிவத்தைப் பூரணப்படுத்தி இலங்கை வங்கியில் பணத்தைச் செலுத்தி அவர்களால் வழங்கப்படும் படிவத்தை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்கவும்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வு நாடிகள்

வட இலங்கைச் சங்கீத சபை,
யாழ்.வலயக் கல்வி அலுவலகம்,
செம்மணி வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் இடத்தில் பெற்றுக் கொள்ளவும். (சி/1165)


## வல்லிபுரத்து ஆழ்வாருக்கு இன்று தேர்த்திருவிழா



### பொற் ரதம் ஏறி வரும் மதுசூதனா!

மாயங்கள் பல செய்யும் மாயவா!
பாம்பணையில் பள்ளி கொள்ளும் பரந்தாமா!
பாவியர் சபை தனிலே
பாஞ்சால நாட்டின் மலர்க்கொடியை காக்க
சக்கரமேந்தி வந்து
சாதனை பல புரிந்த சக்கரத்தாழ்வானே!
தொண்டர் தம் துயர் தீர்க்க
ஐயிரண்டு அவதாரமெடுத்து
தேரேறி வாரும் வைகுந்தா!
**பாரதிதாசன் சத்யா, அல்வாய்.**

### கண்ணன் தேர் வருகுதையா

வருகு தையா தேர் வருகு தையா
கர்(ரு)ண எம் பரம்பரை கண்ணன்
தெருவில் தேர் வருகு தையா
வரும் எம் வல்வினைகள்
நீக்கிட வருகு தையா தேர்
நீல நிறம் தோய்ந்த பார்த்த சாரதி
தேர் வருகுதையா தேர் வருகுதையா
தேவர்கள் புடை சூழ தேர் வருகுதையா
வண்ண வண்ணக் கொடியுடன் தேர்
வருகு தையா தேர் வருகுதையா
பாவிகள் துயர் துடைத்திட கண்ணன்
பார்த்த சாரதியாய் வருகிறார்
தக்க பக்க பலமில்லா எம்மை
பக்குவமாய் பார்த்தே வருகிறார்
பூமியோ புழுதியாய் போகு தையா
புண்ணியம் உமக்குண்டையா காத்திடுவீர்
**ம.கணேசலிங்கம், அல்வையூர்.**

### எம் பாவங்கள் தொலைந்திடும்

தேர் ஏறி வரும் வல்லிபுர மாயவனே!
உனையே ஒருமுறை நினைத்தால் வந்த
துன்பங்கள் பறந்திடும் எம்
பாவங்கள் தொலைந்திடும்
நம் வாழ்வில் வசந்தம் வீசிடும்
**சுப்பிரமணியம் ஜெயரூபன், பருத்தித்துறை.**

### திருத்தேரேறி அருள் புரிவாய் மணிவண்ணா...!

கேசவன் நாராயணன் உயர் மாதவன்
கெஞ்சிடும் அவலங்கள் மாய்க்கும் மதுசூதனன்
மச்சானான் யாதவன் மதுசூதனன்
மண்ணுலகும் விண்ணுலகும்
தொழுதேத்தும் வாமனன்
உந்தி பூத்தோன் உபேந்திரன் இருடிகேசன்
உம்பர் உள்ளம் குடிகொண்ட
உயர் கருணையுறை கோவிந்தன்
ஸ்ரீதரன் பதுமராபன் கமலக்கண்ணன்
சிந்தையுருக உன் சேவடி பணிகிறோம்
திருவருள் தந்து காக்க- இன்று
திருத்தேரேறி அருள் புரிவாய்
வல்லிபுர மாயவா! மணி வண்ணா!
**குறிஞ்சிக்கவி, செ.ரவிசாந், குப்பிளான்.**

### தேரேறி வா!

சங்கு சக்கரம் கையேந்தி வல்லிபுர நாதனே தேரேறி வா
சக்தி உமை அண்ணன் நீயே சங்கடங்கள்
தீர்த்திடவே தேரேறி வா
மும்மூர்த்திகளுள் ஓர் மூர்த்தியாய் முக்குணங்கள்
அழித்திடவே தேரேறி வா
உலகளந்த நாயகனே உலக நீதியை
சொல்லியே தேரேறி வா
**பேரின்பநாதன் பரமநாதன், வட்டுக்கோட்டை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேறிய மக்களை காட்டுக்குள் விடவில்லை

## குற்றச்சாட்டை மறுக்கிறது மீள்குடியேற்ற அமைச்சு

(கொழும்பு)

மெனிக்பாம் முகாமை மூடிவிட்டு அங்கு எஞ்சியிருந்த இடம்பெயர்ந்த மக்களை முல்லைத்தீவிலுள்ள காட்டுப்பகுதியில் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி அநாதரவாக விடப்பட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை மீள்குடியேற்ற அமைச்சு முற்றாக நிராகரித்துள்ளது.

சில ஊடகங்களும் அரசியல் கட்சிகளுமே இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ள போதும் மீள்குடியேற்றப்பட்ட எவரும் இது தொடர்பில் முறையிடவில்லை எனவும் மக்கள் சொந்த விருப்பத்துடனே மீள்குடியேறியுள்ளதாகவும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜனக சுகததாச தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்த மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர், இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த சுமார் 3 இலட்சம் மக்களில் இறுதியாக எஞ்சியிருந்த 400 இற்கும் அதிகமான குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டனர். இதனையடுத்து மெனிக்பாம் நலன்புரி முகாம் மூடப்பட்டது. மக்களுக்கு வசதிகள் எதுவும் வழங்காமலே அவர்கள் மீள்குடியேற்றப்பட்டதாக சில தரப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த சுமார் 3 இலட்சம் மக்களில் சுமார் 2 இலட்சத்து 97 ஆயிரம் பேர் கட்டம்கட்டமாக மீள்குடியேற்றப்பட்டனர். இவர்களில் எஞ்சிய கடைசி தொகுதியினரே இவ்வாறு ஜனாதிபதி தலைமையில் மீள்குடியேற்றப்பட்டனர்.

ஏற்கனவே மீள்குடியேற்றப்பட்ட மக்களை போன்றே இவர்களும் உரிய சகல வசதிகளும் வழங்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்டார்கள். உலர் உணவு ,நிவாரண உதவி, விவசாய உதவி, விதைகள் அடங்கலாக ஆரம்ப தேவைகள் யாவும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

இப்பிரதேசத்தில் கூடுதலான மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. இதனால் அவற்றை அகற்றி இவர்களை மீள்குடியேற்ற தாமதமானது. இவர்கள் முன்பிருந்த இடத்திற்கு அண்மையிலேயே தற்பொழுது மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

கேப்பாபிலவு பகுதியில் 50 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களின் சொந்த இடங்களில் இராணுவம் உள்ளது. இவர்களுக்குஅரசாங்கம் வீடுகளை நிர்மாணித்து வழங்க உள்ளதோடு இதற்காக 32 மில்லியன் ரூபா நிதிஒதுக்கப்பட்டுள்ளது.

ஏனையவர்கள் இங்கு குடியேற விரும்பாததால் சூரிபுரத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களும் கேப்பாபிலவுக்கு வர இணங்கினால் இவர்களுக்கும் வீடுகள் வழங்கப்படும்.

ஒரு வாரத்திற்கு முன்னரே இப்பகுதியில் மிதிவெடி அகற்றப்பட்டது தொடர்பில் யு.என்.எச்.சி.ஆர். இன் அனுமதிக்கடிதம் கிடைத்தது.

மிதிவெடி அகற்றப்படாவிட்டாலும் பரவாயில்லை தங்களை தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துமாறே மெனிக்பாமில் இருந்த மக்கள் கோரியதாக கூறிய செயலாளர் சுய விருப்புடனே அவர்கள் மீள்குடியேற வந்ததாக குறிப்பிட்டார்.

மீள்குடியேற்ற நிகழ்விற்கு கேப்பாபிலவு மக்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டையும் அவர் மறுத்தார். மீள்குடியேற்றும் அனைவரும் இந்த நிகழ்விற்கு அழைத்து வரப்படவில்லை எனவும் அடையாள உத்தியோகபூர்வ நிகழ்வாகவே இது நடந்தது எனவும் அவர் கூறினார். (அ-2)




மெனிக்பாம் முகாமில் தங்கவைக்கப்பட்ட கேப்பாபிலவு பிரதேச மக்கள் கடந்த 24 ஆம் திகதி அங்கிருந்து அழைத்து வரப்பட்டு தற்போது சீனியாமோட்டை எனும் இடத்தில் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி காட்டுப்பகுதியினுள் மீள்குடியேற்றம் என்ற போர்வையில் விடப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

## ஐ.தே.கவுக்கு சிங்கள மக்களின் ஆதரவு குறையவில்லை - எரான்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சிக்கு சிங்கள மக்களின் ஆதரவு குறைவடையவில்லை என கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாணசபைத் தேர்தலின் மூலம் இது நிரூபிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலை விட அண்மையில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் வாக்காளர்களின் எண்ணிக்கையில் உயர்வு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் 28 வீதமான வாக்காளர்களே கட்சிக்கு ஆதரவளித்திருந்தனர். தற்போது அந்த எண்ணிக்கை 39 ஆக உயர்வடைந்துள்ளது.

தேர்தல் மோசடி மற்றும் பாரியளவிலான கூட்டணிகளுடன் தேர்தல் களத்தில் இறங்குவதன் காரணமாகவே ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு தேர்தல்களில் பாரிய வித்தியாசத்தில் வெற்றியீட்டி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கில் போட்டியிட்ட கட்சியின் தமிழ் வேட்பாளர்கள் பிரதேசத்தில் இயங்கி வரும் ஆயுதக் குழுக்களுக்கு அஞ்சி பிரசார மேடைகளில் பேசவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## ஆகக்குறைந்த முத்திரை கட்டணத்தில் திருத்தம்?

(கொழும்பு)

ஆகக்குறைந்த முத்திரை கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் தீர்மானிக்கவுள்ளதாக திணைக்களம் குறிப்பிடுகின்றது.

இதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு இன்றையதினம் கூடி இது தொடர்பிலான தீர்மானமொன்றை எடுக்கவுள்ளதாக பிரதி தபால்மா அதிபர் ஆர்.டி.பி.காமினி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தபால் திணைக்களத்திற்கு சாதாரண கடிதமொன்றுக்கு 17 ரூபாவும் வர்த்தக கடிதமொன்றுக்கு 7 ரூபாவும் நட்டம் ஏற்படுவதாக அவர் கூறினார்.

சாதாரண கடிதமொன்றுக்கு 22 ரூபாவை தபால் திணைக்களம் செலவிடுகின்ற போதிலும் தற்போது அந்த கடிதத்தை அனுப்புவதற்கு 5 ரூபா முத்திரையே பயன்படுகிறது.

வர்த்தக கடிதமொன்றுக்கு 22 ரூபா செலவிடப்படுகின்ற போதிலும் தற்போது 15 ரூபாவிற்கே அந்த கடிதங்கள் அனுப்பப்படுவதாக தபால்மா அதிபர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ-2)

## ஊழியர்கள் தாமாகவே விலகிச் செல்லும் திட்டம்

### முன்வைக்கிறது எச்.எஸ்.பி.சி.வங்கி

இலங்கையில் எச்.எஸ்.பி.சி. வங்கியானது சர்வதேச முறையுடன் இணைந்து போகும் வகையில் ஓர் உலகளாவிய திட்டத்தை செயற்படுத்துவதற்காக அதன் ஊழியர்களுக்கு தாமாக விலகிச் செல்லும் திட்டமொன்றை முன்வைத்துள்ளது.

செயற்றிறனையும் இலாபத்தையும் அதிகரித்து நிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் எச்.எஸ்.பி.சி. குழுமம் முழுவதுமே உலகளாவிய நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்குகின்றது.

தமது ஊழியர்களுக்கு இவ்வாறான திட்டமொன்றை முன்வைத்துள்ளதை எச்.எஸ்.பி.சி. வங்கி பேச்சாளர் உறுதிப்படுத்தினார். எனினும் எமது மக்கள் தொடர்பில் குறிப்பான விடயம் அல்லது ஊகங்கள் தொடர்பில் நாம் கருத்து தெரிவிக்கப்போவதில்லையெனவும் அவர் கூறினார்.

இத்திட்டத்தில் பாதிக்கப்படும் ஊழியருக்கு நாம் மீள்வேலைவாய்ப்பு, வெளியிடங்களில் தொழில் பெறுவதற்கான வழிகாட்டல்கள் ஆகியவற்றை வழங்குவோமென எச்.எஸ்.பி.சி. இலங்கை பேச்சாளர் கூறினார்.

தற்போது எச்.எஸ்.பி.சியிலுள்ள ஆயிரத்து 700 ஊழியர்களை 20 சதவீதத்தால் குறைக்கும் நோக்கில் வங்கியுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்திட்டம் பற்றி இலங்கை எச்.எஸ்.பி.சி. ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டு விட்டதாக இத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

உலகளவில் எச்.எஸ்.பி.சி. 30 ஆயிரம் ஊழியர்களை விலக்கியுள்ளதெனவும் இதனால் கூடுதலாக பாதிக்கப்படுவோர் சிரேஷ்ட, நடுத்தர முகாமையிலுள்ளவர்களாக இருப்பரென வெளிநாட்டு ஊடக அறிக்கை தெரிவித்துள்ளது. (அ-2)

## புலிகள் தடைமீதான தீர்ப்பாய விசாரணையில் வைகோ

விடுதலைப்புலிகளின் தடை மீதான சட்ட தீர்ப்பாயத்தின் விசாரணையில் வைகோ பங்கேற்பார் என்று ம.தி.மு.க. செய்தி வெளியிட்டுள்ளது. இதுகுறித்து நேற்றையதினம் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

விடுதலைப்புலிகளின் மீதான தடையை நீட்டித்து மத்திய அரசு அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த தடையாணை சட்டவிரோத தடுப்புச்சட்டம் தொடர்பான தீர்ப்பாயத்தில் பொது விசாரணை மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்டவர்களின் கருத்தை கேட்டறிந்து பின்னர் தடையாணை தொடர்பான தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்.

சட்டவிரோத தடுப்புச்சட்ட தீர்ப்பாயத்தின் விசாரணை இன்று காலை 10.30 மணிக்கு சென்னையில் நடைபெறவுள்ளது. அந்த விசாரணையில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ பங்கேற்கவுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பிரச்சினை, இந்தியாவின் தேசிய பிரச்சினையா?

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அண்மையில் இந்தியா விஜயம் செய்த போது அவரது வருகைக்கு எதிரான போராட்டங்களும் கூறப்பட்ட கருத்துக்களும் இனப் பிரச்சினைக்கு புதிய ஒரு வடிவம் கொடுத்துள்ளதோ என்று எண்ணத்தோன்றுகிறது. இடைப்பட்டகாலத்தில் இதனை இமாலய வெற்றியாக கருதும் இலங்கைத் தமிழர்



தலைமைகள் எதிர்காலத்தில் இதனால் குழப்பமே மிஞ்சும் என்பதனையும் உணர்ந்திருத்தல் அவசியம்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விஜயத்தின் போது, அவரது வருகையை எதிர்த்தும் அவரது அரசை எதிர்த்தும் தமிழ்நாட்டில் அரசியல் போராட்டங்கள் நடைபெறுவது வாடிக்கையாகிவிட்டது. இதுவே பல்வேறு காலகட்டங்களில், தேசிய தலைநகரான புதுடெல்லிக்கு இடம் பெயர்ந்துள்ளது. அண்மைக் காலத்தில் இனப்பிரச்சினையின் மற்றொரு அலகாக உருவகப்படுத்தப்படும் தமிழ்நாட்டு அகதிகள் முகாம்களில் உள்ளோர் அவுஸ்திரேலியாவுக்கு சட்டத்திற்குப் புறம்பாக பயணப்பட்டு கைது ஆவதும், கேரளா, கர்நாடக ஆகிய அண்டை மாநிலங்களை விட்டுவைக்கவில்லை.

ஆனால்,இந்த முறை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விஜயத்தை எதிர்த்து ம.தி.மு.க தலைவர் வைகோ மத்திய பிரதேச மாநிலத்தில் போராட்டம் நடத்தியது ஒரு புதிய அரசியல் பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனை ஒட்டி, மத்திய பிரதேச மாநிலத்தின் பாரதீய ஜனதாக்கட்சி முதலமைச்சர் சிவ்ராஜ்சிங் சவ்ஹான் , இலங்கைப்பிரச்சினை குறித்து கருத்துத் தெரிவித்திருப்பதும் இந்தியாவின் வெளிநாட்டுக்கொள்கை முடிவுகள் குறித்த உள்நாட்டு அரசியல் பாரம்பரியத்தில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை இனப்பிரச்சினை குறித்து தமிழக முதல்வர்களே மத்திய அரசின் செயற்பாடுகள் குறித்து நேரடியாகவும் எதிர் மறையாகவும் கருத்துக் கூறிவந்துள்ளனர். இந்திய அரசியல் சாசன கோட்பாடுகளின் படி, மத்திய – மாநில அரசுகளுக்கு இடையேயான அதிகாரப்பங்கீடு முறைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி வெளிநாட்டு உறவு மற்றும் தேசியப்பாதுகாப்பு குறித்த அதிகாரங்கள் முற்றிலுமாக மத்திய அரசை மட்டுமே சார்ந்தது. இது குறித்து, மாநில அரசுகள் கருத்துக்கூறுவதை மத்திய அரசு வரவேற்றதில்லை.

அதேசமயம் இலங்கை இனப்பிரச்சினை குறித்து தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளும் அதன் காரணமான மாநில அரசும் கருத்துக்கூறுவதை மத்திய அரசு வரவேற்று வந்துள்ளது. காரணம், இனப் பிரச்சினை, இனத்தாக்குதலாக இலங்கையில் உருவெடுத்த 80 களில், தமிழ்நாட்டில் இருந்து செயற்படத்தொடங்கிய தமிழர் தலைமைகளோடு கலந்தாலோசித்து கருத்துக் கூறும் நிலையில் மாநில அரசும் அரசியல் கட்சிகளும் முக்கிய பங்கு வகித்தன. இதுவே

நன்றி இணையம்


இனப்பிரச்சினை குறித்து பிற்காலத்தில் மத்திய அரசு முழுவதுமாக புரிந்து கொள்ள வழிசெய்தது என்றாலும், அன்றும்சரி, அடுத்த காலங்களிலும் சரி இனப்பிரச்சினையை உள்நாட்டு அரசியல் மற்றும் தேர்தல் வியூகங்களில் ஒரு பகுதியாகவே தமிழ்நாட்டிலுள்ள திராவிட பாரம்பரிய கட்சிகள் மாற்றிவிட்டது என்பதே உண்மை. அதுவே இன்றளவும் தொடருகிறது. அவர்களது போட்டி மனப்பான்மை பல்வேறாக உருவெடுத்து அவர்களின் சாதனையாக இலங்கைத் தமிழ் மக்களையும் அவர்களது புலம்பெயர் தலைமைகளையும் எண்ண வைத்துள்ளது. இனப்போரில் உச்சக்கட்டத்தில், விடுதலைப்புலிகள் இயக்கம், இந்தியாவை மையப்படுத்தி தவறான சில அரசியல் ரீதியான முடிவுகளை எடுத்ததில் கள நிலைமை குறித்த அவர்களது அறியாமையும் அதனை ஒட்டிப்பிறந்த தவறான எண்ணோட்டமும் கூட முக்கியகாரணமாகும்.

தமிழ்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளின் பின்புலம் உணர்ந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உட்பட இலங்கையில் இருந்து செயற்பட்டுவரும் அரசியல் தலைமைகள் அவர்களுடனான உறவை அடக்கியே வாசித்து வந்துள்ளது. கடந்த காலத்தில் தி.மு.க. – அ.தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளில் உள்நாட்டு அரசியல் களத்தில் இனப்பிரச்சினை மற்றும் ஓர் பகடையாக பயன்படுத்தப்படுகிறது என்ற எண்ணமே இதற்குக்காரணம். எம்.ஜி.ஆர். காலத்துக்குப்பின்னால் இந்த போட்டியில் பல குட்டி கட்சிகளும் சேர்ந்து கொண்டதால் தமிழ்நாட்டில் இது குறித்த அரசியல் பிரச்சினை பெரியதானதே தவிர இலங்கைத் தமிழ் மக்களுக்கு அதனால் பயன்படும் முடிவுகள் கிடைக்கவில்லை.

அன்றும் இன்றும், ஏன், என்றுமே இலங்கைத் தமிழ் சமுதாயம் இன்னமும் இந்தியாவில் மத்திய அரசை நம்பியே அரசியல் செய்ய வேண்டியுள்ளது என்பதே சர்வதேச நிலைமையின் சாத்தியக் கூறுகள். இதில் தமிழ்நாட்டு அரசியல் காரணங்களுக்காக மத்திய அரசு மாறுபட்ட முடிவுகளை எடுக்கும் என்று தவறுதலாக இன்னமும் கணக்கிட்டு விடக்கூடாது. அவ்வாறு கணக்கிட்டு தவறியதாலேயே கடந்த 2009 ஆம் ஆண்டு காலகட்டத்தில் தமிழ் சமுதாயமே இந்தியாவை பகை நாடாக கருதும் சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட நஷ்டம் யாருக்கு என்பதை தமிழ் சமுதாயமும் அவர்களது சூத்திரதாரிகளாக தங்களை வரிந்துகொண்டுள்ள புலம்பெயர் தமிழ்க் குழுக்களும் சிந்தித்து செயற்படவேண்டும்.

இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இந்திய விஜயத்தின் போது போராட்டம் நடத்தினோம் என்று தமிழ் நாட்டில் அரசியல் கட்சிகள் மார்தட்டிக்கொள்ளலாம். வைகோ போன்ற தலைவர்களும் மத்திய பிரதேச எல்லையில் இனப்பிரச்சினைக்கு குரல் கொடுத்து அதனை அகில இந்தியப்பிரச்சினையாக மாற்றிக் காட்டியதாகக் கருதி பெருமிதம் அடையலாம். அவர்களது இந்த முயற்சிகளை புலம்பெயர் தமிழர் குழாம் பலவும் தங்களது எதிர்கால முயற்சிகளுக்கான அடுத்தகட்ட நடவடிக்கையாக நினைத்துக்கூட திட்டமிடலாம்.

ஆனால், இவையெல்லாம் ஒரு மாயையான தோற்றத்தையே மீண்டும் மீண்டும் உருவாக்குவதற்கு உதவும். இத்தகைய மாயையில் சிக்கித்தான் விடுதலைப்புலிகள் இயக்கம் தனது திட்டமிடல் முதல் செயற்பாடுகள் வரை அடுத்தடுத்து தவறிழைக்கத் தொடங்கியது. இந்தியா என்று மட்டுமல்ல, தமிழ்த்



தலைமையின் அப்போதைய பிற சர்வதேச முனைப்புக்களும் இதுபோன்ற வெளிப் பூச்சுக்களை மட்டுமே உண்மை என நம்பி எடுக்கப்பட்டவையே. அதேநிலைக்கு மீண்டும் அவர்கள் தங்களைத் தாங்களே தள்ளி விட்டுக் கொண்டுள்ளனரோ என்று நினைக்க நினைத்துக் கவலைப்பட மட்டுமே தற்போதைய போராட்டங்கள் மீண்டும் மீண்டும் வழிவகுத்து வருகின்றன.

எம்.ஜி. ஆர். மட்டுமே தீர்வுத்திட்டத்திற்கு முழு ஆதரவு கொடுத்து அதற்கு செயல் வடிவம் கொடுப்பதில் மத்திய அரசோடு ஒருங்கிணைந்து பணியாற்றினார். இனப்பிரச்சினையில் தமிழர்களின் நலன் காக்க இந்தியா ஆவன செய்ய வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திவந்த அதே சமயம் மத்திய அரசு தீர்வுத்திட்டங்களை முன்வைத்தபோதெல்லாம் அவை குறித்து அந்தக்காலகட்டத்தில் தமிழ்நாட்டில் வசித்துவந்த அரசியல் தலைமைகள் மற்றும் போராளிக்குழுக்களுடன் எல்லாம் பேச்சுவார்த்தை நடத்தி அவற்றை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல தன்னால் ஆன முயற்சிகளை செய்து வந்தார்.

இது பிற தமிழ்நாட்டுக் கட்சிகளுக்கோ எம்.ஜி.ஆர்.க்குப் பின்னர் வந்த தலைவர்களுக்கோ, மாநில அரசு தலைமைகளுக்கோ பொருந்தாது என்பதே வேதனைப்பட வேண்டிய விடயம். இதற்காக இனப்பிரச்சினையில் எம்.ஜி.ஆர். திராவிடப் பேட்டி அரசியலை கலக்கவில்லை என்று அல்ல அர்த்தம். அரசியல் செய்யும் போதும்'அதன் முடிவு இனப் பிரச்சினைக்கு சரியான முடிவுகளை முன்வைக்கவேண்டும் என்பதில் அவர் கவனமாக இருந்தார் என்றே சொல்லவேண்டும்.

ராஜீவ்காந்தி படுகொலை தமிழ்நாடு அல்லாத இந்தியாவின் பிறமாநிலங்களின் இனப் பிரச்சினை குறித்து தவறான எண்ணங்கள் உருவாக தமிழ்நாட்டுக்கட்சி தலைமைகளே காரணம். உதாரணத்திற்கு ஒன்று இரண்டு விடயங்களைக்கூறலாம். இந்திய நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கும்போதே வைகோ சட்டத்திற்குப்புறம்பாக கடல்வழியில் இலங்கை சென்று விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனை சந்தித்து வந்ததை பிறமாநிலங்களிலுள்ள அரசியல் கட்சிகளால் ரசிக்க முடியவில்லை. அப்போது அவரது நிலைப்பாட்டை வைகோ அன்று சார்ந்திருந்த தி.மு.க. தலைமையும் மாநில முதலமைச்சருமான கருணாநிதி ஏற்றுக் கொண்டதும் வரவேற்கத்தக்க விடயமாக தேசியக்கட்சிகளால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை.

அதுபோன்றே இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து திரும்பி வந்தபோது அவர்களுக்கு சென்னையில் அளிக்கப்பட்ட வரவேற்பை முதலமைச்சர் கருணாநிதி புறக்கணித்தார். இதனை தேசிய அவமதிப்பென்று இந்தியா முழுவதுமாக பல அரசியல்கட்சித் தலைவர்களும் அரசியல் விமர்சகர்களும் கருதினார்கள். பின்னர் தமிழ்நாட்டில் ராஜீவ் காந்தி படுகொலை நடந்த போது அப்போதே சொன்னேன் கேட்டியா? என்ற தொனியிலேயே அவர்களது கருத்துக்கள் அமைந்தன. அதனடிப்படையில் தமிழ்நாடு உட்பட நாட்டின் அனைத்துப்பகுதிகளும் இலங்கைத் தமிழ்மக்களுக்கு எதிராகவே அனைத்து மக்களின் கருத்தும் அமைந்தது என்பதே உண்மை. சுமார் 20 ஆண்டுகள் சென்ற பின்னரும் 2009 ஆம்ஆண்டு இனப்போரின் கடைசிக் கட்டங்களில் தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங்களிலும் இலங்கைப்பிரச்சினை இந்திய தேர்தல் பிரச்சினையாக மாற்ற முடியாததற்கு இதுவே முக்கிய காரணம். ஏன், வைகோவே தனது சொந்தத் தொகுதியில் தோல்வியடைவதற்கும் மக்கள் மத்தியில் நிலவிவந்த சூழலுக்கும்– நிஜத்திற்கும் இடையே இருந்த வேற்றுமையே காரணம்.

தற்போது மத்திய பிரதேசத்தில் சென்று வைகோ போராட்டம் நடத்தி வந்துள்ளதை அங்குள்ள மக்கள் பெரிதாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள். இன்றும் அவர்களுக்கு இனப் பிரச்சினை குறித்து பரவலான செய்தியோ கருத்துக்களோ இல்லை. அவற்றை அறிந்து கொள்ள அவர்களுக்கு ஆவல் இருப்பதாகவும் கருதமுடியாது. அதே சமயம் பின்னொரு காலத்தில் இனப்பிரச்சினையால் இந்தியாவிற்கு வேறு ஏதாவது பிரச்சினை தோன்றுமேயானால் அப்போது அவர்கள் எல்லாம் இப்போதைய வைகோ போராட்டத்தை தவறான கண்ணோட்டத்துடன் காண்பார்கள்.

இதுவே இயற்கையும் கூட.

இது தான் சரித்திரம் உணர்த்தும் பாடம். இதனைத் தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் உணர்ந்து செயற்படுகிறார்களோ இல்லையோ இலங்கையில் உள்ள தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். கூட்டமைப்புத் தலைமைபோலவே புலம்பெயர் தமிழர் தலைமையும்தமிழ்நாட்டு அரசியலில் மூக்கை நுழைக்காமல் அரசியல் செய்ய வேண்டியதன் நிர்ப்பந்தத்தை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். ஏன் இலங்கையின் உள்ளே இனப்பிரச்சினை குறித்த அரசியலைக் கையாளும் கூட்டமைப்பு தலைமை தமிழ்நாட்டு அரசியலையும் சரியாக கையாளத் தெரிந்தவர்களே.

இன்னும் சொல்லப்போனால், இந்தப் பழம் புளிக்கும் என்று உணர்ந்து கூட்டமைப்பு உதாசீனப்படுத்தும் தமிழ்நாடு அரசியல் தலைமைகளைப் புலம்பெயர் தமிழர்கள் ஆதரித்து பயன்படுத்த முயல்வதால் மட்டும் எந்தவிதத்திலும் இனப்பிரச்சினைக்கு முடிவு ஏற்பட்டு விடப்போவதில்லை. மாறாக வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழி உடைந்த கதையாகவே மாறிவிடும் நிலைமையே மீண்டும் மீண்டும் ஏற்பட்டுவந்துள்ளது. அவ்வாறே இலங்கையில் இருந்து சென்ற சிங்கள–பௌத்த புனித யாத்திரிகள் மற்றும் பள்ளிக்குழந்தைகள் மீது தமிழ்நாட்டில் நிகழ்ந்த தாக்குதல்கள் , மாநிலத்தில் மட்டுமல்ல, இந்தியாவில் பிற மாநிலங்களிலும் ஏன், இலங்கையில் கூட்டமைப்புத் தலைமையிடமிருந்து எதிர்மறையான கருத்துக்களையே உருவாக்கியது.



அதுபோன்றே இதுவரையிலும் இலங்கை இராணுவத்தினருக்கு தமிழ்நாட்டின் பயிற்சி அளிப்பது குறித்து தமிழ்நாட்டு அரசு மற்றும் அரசியல் தலைமைகளின் உணர்விற்கு மதிப்பளித்துவந்த மத்தியரசு இந்த முறை முதல்வர் ஜெயலலிதாவின் வேண்டுகோளை கண்டுகொள்ளவே இல்லை. காரணம் இந்திய அரசியல் சட்டத்தின் அதிகாரப்பகிர்வு முறையின் படி பாதுகாப்பு, இராணுவம் மற்றும் அயல்நாட்டு உறவு போன்றவை குறித்து அனைத்து விடயங்களும் மத்தியரசின் கீழ்வரும். சட்டப்படியும் வழக்கப்படியும் மாநில அரசுகள் அவற்றில் எந்தவிதக்கருத்தும் தெரிவிக்காது. அவ்வாறு தெரிவிக்கப்படும் கருத்தும் இரகசியமாகவே இருக்கும்.

ஏதாவது மாநில அரசு தொடர்ந்து மத்திய அரசை இது போன்ற விடயங்களில் சீண்டிப் பார்த்தால் அதன் முடிவுகள் என்னவாக இருக்கும் என்பதை ஜெயலிலதாவும் உணர்ந்தே இருந்திருக்கிறார். வேறொன்றும் இல்லை என்றாலும் 20 ஆண்டுகளில் 2 முறை கருணாநிதி அரசு டிஷ்மிஸ் செய்யப்பட்டதை மறந்திருக்க முடியாது. எது எப்படியோ இலங்கை இராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளிக்கும் விடயத்தில் மத்திய அரசு முடிந்த முடிவை பாதுகாப்பு இணை அமைச்சர் பல்லம்ராஜு தெரிவித்த பிறகு தமிழ்நாட்டு அரசு தரப்பிலிருந்து எந்தவிதமான கருத்தும் வெளியிடப்படவில்லை என்பதே உண்மை. அதுபோன்ற மாநிலத்தில் உள்ள பிற கட்சிகளும் எந்தவிதக்கருத்தும் இதுவரை கூறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வநாயகத்திடம் கூட்டமைப்பு பாடம் கற்க வேண்டும்

## அமைச்சர் தினேஷ் கூறுகிறார்

(கொழும்பு)

**இந்தியாவுக்குச் சென்று தமிழ்க்கூட்டமைப்பு என்னதான் பேச்சுவார்த்தை நடத்தினாலும் தீர்வு காணும் விடயத்தில் எமது நாட்டின் பாராளுமன்றத்திடமே வரவேண்டும். யதார்த்தபூர்வமான தீர்வைக் காணவேண்டுமாயின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் பங்கேற்க வேண்டியது அவசியமாகும் என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பானது எதிர் வரும் 10 ஆம் திகதியளவில் இந்தியாவுக்குச் சென்று அந்நாட்டின் பிரதமர் உள்ளிட்ட தலைவர்களுடன் சந்திப்பை நடத்தவுள்ளமை தொடர்பில் தகவல் வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பானது இந்தியாவுக்குச் சென்று பேச்சுக்களில் ஈடுபடுவது புதிய விடயமல்ல. காலாகாலமாக அவர்கள் இதனையே செய்து வருகின்றனர். ஆனால், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் இதுபோன்று டில்லிக்கு அடிக்கடி சென்று அவர்களை அசௌகரியப்படுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த்தேசிக் கூட்டமைப்பு மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன இந்தியாவுக்கு விஜயம் செய்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது புதியவிடயமல்ல. அவர்கள் அடிக்கடி இவ்வாறு விஜயங்களை மேற்கொண்டு கலந்துரையாடல்களில் ஈடுபடுகின்றனர்.

ஆனால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு யதார்த்தபூர்வமான நிலைமையை புரிந்து கொள்ள வேண்டும். அதாவது ஆளும் கட்சியினால் நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலமாகவே நாட்டில் தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலில் செய்ய வேண்டியது பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்பதேயாகும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்து தற்போது ஒருவருடம் கடந்துவிட்டது. ஆனால், இன்னும் அதில் இணைந்து கொள்ளாமல் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தவிர்த்தே வருகின்றது. பல்வேறு தரப்பினர் அழைப்பு விடுத்தும் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் இணைந்துகொள்ளாமல் இருக்கின்றது.

இந்தியா அல்ல எங்கு சென்றாலும் தீர்வு என்று வரும்போது அது பாராளுமன்றத்துக்கு வந்தேயாக வேண்டும். பாராளுமன்றமே இலங்கையில் இருக்கின்ற உயரிய இடமாகும். பாராளுமன்றத்திலேயே நாட்டுக்குரிய சட்டங்கள் இயற்றப்படுகின்றன.

நிதி தொடர்பான அனைத்து அதிகாரங்களும் பாராளுமன்றத்துக்கே இருக்கின்றன. எனவே, பாராளுமன்றத்தில் எட்டப்படுகின்ற தீர்வே யதார்த்தபூர்வமானதாக அமையும்.

இதேவேளை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் செல்வநாயகத்திடம் பாடங்களை கற்க வேண்டும். அவர் அகிம்சைவாதியாக எமது நாட்டுக்குள்ளேயே தனது அணுகுமுறையை கொண்டு சென்றார். மாறாக அடிக்கடி டில்லிக்கு சென்று பேச்சுக்களை நடத்தி அவர்களுக்கு கஷ்டங்களைக் கொடுக்கவில்லை.

அவர் அகிம்சை ரீதியாக செயற்பட்டார். அவரின் கோரிக்கைகள் பயங்கரமானவையாக இருந்தன. அது தொடர்பில் முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால், அவரின் அணுகுமுறை உரியமுறையில் அமைந்தது என்றார். (அ-2)

# முல்லைத்தீவில் ஆயுதங்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வெள்ளாம் முள்ளி வாய்க்கால் பகுதியில் ஒரு தொகை ஆயுதங்களை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளதாக லங்காதீப செய்தி வெளியிட்டுள்ளது.

27 ரீ-56 ரக துப்பாக்கிகள், இனம் காணப்படாத தோட்டக்கள் 200, ரீ 56 ரக மகசீன்கள் மற்றும் மேலும் பல ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு வெள்ளாம் முள்ளி வாய்க்கால் பிரதேசத்தின் நிலக்கீழ் பதுங்கு குழியொன்றில் குறித்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆனால், இவை எப்போது மீட்கப்பட்டது என அச் செய்தியில் குறிப்பிடப்படவில்லை.

ஆயுதங்கள் மீட்கப்பட்டமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் அச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (அ-2)

# தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய பாடசாலையில் சித்தி அடைந்த மாணவர்களின் விபரங்கள் அப்பாடசாலை அதிபர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றின் விபரங்கள் வருமாறு,

**மு/விசுவமடு மகா வித்தியாலயம்**

ற.சுரபி-183, ச.புங்கவி-179, ச.துவாரகன்-175, ம.பவித்திரன்-173, வி.டனுஸ்ரிகா-168, மு.சஞ்சிகா-165, அ.சரவண்ஜா-165, தி.தர்சிகன்-159, க.வைஸ்ணாயினி-159, சி.நிவேதிகா-158, உ.சானுஜா-158, ர.துஸ்யந்தி-154, கு.குமணன்-149, ஜெ.துவாரகன்-149, உ.சங்கீதா-147, த.ஜிந்துசா-146, சி.டினுசாயினி-146.

**கிளி/சிவநகர் அ.த.க.பாடசாலை**

மேகராசா நிஷாந்தன்-162, பாலச்சந்திரன் நேருஜா-158, செல்வராசா யதுர்சிகா-147.

**யா/பரமேஸ்வரா வித்தியாலயம் திருநெல்வேலி**

**(திருநெல்வேலி இ.த.க.பாடசாலை)**

மேகானந்தசிவம் விதுர்சன்-164, அருள்ராஜா சிவபவன்-158.

**யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி**

விபுசா சிறிகரன்-177, பிரியங்கா லோகதாசன்-176, யுசந்தா யூலன்-174, எப்சிபா ராஜேஸ்வரன்-169, விதுஷிகா விசுவலிங்கம்-162, வித்தியா விஜயதாஸ்-158, யாழினி மணிவண்ணன்-154.

நந்தாயினி காந்தராசா-154, குமரேஸ்வரன் வஜிதரன்-154, தனுஷிகா சேதுபதி-152, கருணாகரன் கவிஸ்ணன்-152, செல்வக்குமார் பத்மப்பிரியன்-151, வினோதவாணி தர்மகுலசிங்கம்-149, அனுஷியா கருணாகரன்-148.

(அ)

# விலங்கு விசர்நோயை இல்லாதொழிப்போம்

இலங்கையில் விலங்கு விசர்நோய்த் திட்டமான நீர்வெறுப்பு நோய்க்கட்டுப்பாட்டு திட்டம் என்ற வடிவில் 1975 ஆம் ஆண்டு ஆரம்பமானது. இத்திட்டத்தின் பயனாக நீர் வெறுப்பு நோய் தொடர்பாக சமூகத்திற்கு பல விழிப்புணர்வுகள் ஏற்படத் தொடங்கின. உதாரணமாக 1973 ஆம் ஆண்டு விலங்கு விசர்நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 377 ஆக காணப்பட்டது.

2007 ஆம் ஆண்டளவில் இறப்பு எண்ணிக்கை 56 ஆக குறைந்துள்ளது. இந்நோயை கட்டுப்படுத்துவதற்காக தற்போது தேசிய ரீதியாகவும் மாகாண ரீதியாகவும் விழிப்புணர்வூட்டப்பட்டு வருகின்றது. 2016 ஆம் ஆண்டளவில் விலங்கு விசர்நோயற்ற இலங்கை எனும் தொனிப்பொருளில் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விலங்கு விசர்நோய்க்கு காரணமான வைரசானது பாலூட்டிகளான நாய், பூனை, வௌவால், நரி, குரங்கு போன்ற விலங்குகளின் உடலில் வாழ்ந்து அவற்றின் நரம்புத் தொகுதியை தாக்கி உடற்செயற்பாட்டை பாதித்து இறப்பை ஏற்படுத்துகின்றது.

இவ்விலங்குகள் மனிதனை கடிக்கும் போது இவ்வைரசானது மனித உடலில் தொற்றிக் கொள்கிறது. விலங்கு விசர்நோய் ஏற்பட்டதன் பின்பு இறப்பு நிச்சயமாகி சில நாட்களில் கடியுண்டவர் இறந்து விடுகிறார்.

விலங்கு விசர்நோயுள்ள நாயின் பொதுவான அறிகுறிகளாவன, வளக்கத்திற்கு மாறான நடத்தை, உரத்த ஒலியில் குரைத்தல், கண்ட பொருட்களையும் கடிக்கும், வால் கீழ்ப் புறமாக வளைந்து காணப்படும், வாயிலிருந்து உமிழ்நீர் வடிந்தபடி இருக்கும், கண்கள் சிவந்து காணப்படும், கால் பலவீனமாக காணப்படும், உணவு உண்ணுவதற்கு கஷ்டப்படும் அல்லது மறுக்கும், இருளான இடங்ளை விரும்பும், மனிதரை கடிக்கத் தொடங்கும், சில நாய்களில் மேற்படி அறிகுறிகள் தென்படாமலும் காணப்படலாம். எனினும் பெரும்பாலும் விலங்கு விசர்நோய் அறிகுறிகளுடன் காணப்படும் நாயானது 14 நாட்களுக்குள் இறந்து விடும். எனவே, நாயொன்று இறக்கும் சந்தர்ப்பத்தில அதனது நடத்தை மாற்றம் வழமைக்கு மாறாக ஆக்ரோசமாக இருந்தால் விசர்நோய் ஏற்பட்டிருக்கலாம் என்பதை கருத்திற் கொள்ள வேண்டும்.

நாய்க்கடிக்குள்ளானவர் காயத்தை 5-15 நிமிடங்களுக்கு ஓடும் நீரினால் கழுவுவதன் மூலம் நாயின் உமிழ்நீரை பெருமளவில் காயத்திலிருந்து அகற்ற முடியும். எனவே, விலங்கு விசர்நோயுடைய நாயினால் கடியுண்டிருந்தால் இவ்வாறு கழுவும் போது வைரசுக்கிருமிகளையுடைய உமிழ்நீர் பெருமளவில் காயத்திலிருந்து அகற்றப்படுகிறது. பின்பு சவர்க்காரமிட்டு கழுவிய பின்னர் சுத்தமான தொற்று நீக்கிய துணியால் துடைத்து காயத்தை மூடி அரசவைத்தியசாலைக்கு செல்லுதல் வேண்டும்.

வைத்தியசாலைக்கு செல்லும் போது கடித்த நாய் பற்றிய தகவல்களை அறிந்து செல்வதனால் வைத்தியரின் சிகிச்சை முறையினை இலகுபடுத்தி உதவ முடியும். உதாரணமாக நாய்க்கு வருடாவருடம் விலங்கு விசர்நோய் தடுப்பூசி (ARV) வழங்கியதற்கான பதிவேட்டினை கொண்டு செல்லுதல், வளர்ப்பு நாயா தெருநாயா, நாயில் காணப்பட்ட அறிகுறிகள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

## இன்று விலங்கு விசர்நோய் தினம்

அந்தரங்க அல்லது பாலுறுப்புகளில் நாய் கடித்திருந்தால் வெட்கம் காரணமாக வைத்தியரிடம் கூறாமலிருப்பதை முற்றாக தவிர்த்தல் வேண்டும். காயத்தின் தன்மை, காயத்தின் வகை, கடித்த இடம் என்பன சிகிச்சையை இலகுபடுத்தி குணமடைய பெரிதும் உதவும். சிறிய காயங்கள், கீறல்களை அலட்சியமாக எண்ணாமல் சிகிச்சை எடுக்க வேண்டும். இதன் மூலம் இறப்பை முற்றாக தவிர்க்க முடியும்.

நாய்க்குட்டிக்கு 6 வார வயதில் இருந்து விலங்கு விசர்நோய்த்தடை ஊசியை வழங்க முடியும். வருடாவருடம் வளர்ப்பு நாய்களுக்குரிய விலங்கு விசர்நோய்த்தடை ஊசிமருந்தினை பெற்று பதிவேட்டினையும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். நாய்களின் இனப்பெருக்கத்தை தவிர்க்க விலங்கு வைத்திய சிகிச்சை நிலையத்தை அணுகி கருத்தடை சத்திரசிகிச்சை அல்லது கருத்தடை ஊசிகளை நாய்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் பொது இடங்களில் நாய்க் குட்டிகளை விட்டுச் செல்வதை தவிர்க்க வேண்டும். சந்தைகள், பொது இடங்களில் உணவுக் கழிவுகளை முறையாக அகற்றி பொது இடங்களில் நாய்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும். மக்களாகிய நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் 2016 ஆம் ஆண்டில் விலங்கு விசர்நோயற்ற இலங்கை எனும் இலக்கை இலகுவாக நாம் அடைவது உறுதி.

**வை.பிறேமகுமார்**
**(முன்னாள் பொதுச்சுகாதார பரிசோதகர், கொழும்பு தேசிய வைத்தியசாலை)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

233

## பாவத்தில் வந்த பணம்

ஒரு ஊரில் இரண்டு சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் படிப்பறிவு ஏதும் இல்லாதவர்கள். ஆனால் இருவரும் ஒருவர் மீது ஒருவர் மிகுந்த பாசம் வைத்திருந்தனர். வறுமையில் மிகவும் வாடினர். வறுமையை விரட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் வெளியூருக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

ஒருநாள் கடற்கரை அருகிலுள்ள ஒரு மீனவர் குடியிருப்புக்குச் சென்றனர். சகோதரர்கள் இருவரும் சோதிட வல்லுநர்கள் போல் வேடம் தரித்திருந்தனர். ஓலைச்சுவடிகளையும் கையில் வைத்துக்கொண்டனர். அறியாமை நிறைந்த அந்தக் கிராமமக்கள் சகோதரர்கள் இருவரும் பெரிய சோதிடப் புலிகள் என்று நம்பிவிட்டனர். அவர்கள் கூறிய சோதிடத்தை தெய்வவாக்காக எண்ணி அந்தமக்கள் சேர்த்துவைத்த பணத்தையெல்லாம் அவர்களுக்கு அள்ளித்தந்தனர்.

மந்திரம், மாந்திரீகம் என்று இரு சகோதரர்களும் தடல் புடல் செய்து ஒன்றுமறியாத அப்பாவி மக்களை ஏமாற்றி விட்டனர். நிறையப் பணம் குவியவே அவற்றை மூட்டை கட்டிக்கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டனர். வழியில் சேர்த்த பணத்தையெல்லாம் பொற்காசுகளாக மாற்றி ஒரு பையில் போட்டுக் கொண்டு நடந்தனர்.

போகும் வழியில் பண மூட்டையை ஒருவர் மாற்றி ஒருவர் முறைப்படி எடுத்துச் சென்றனர். பண மூட்டையை தலையில் சுமக்கும் போது அவர்களின் மனநிலை மிகவும் விசித்திரமாக இருந்தது. பந்த பாசமெல்லாம் பறக்க ஆரம்பித்தது. எந்தச் சகோதரனிடம் பண மூட்டை இருக்கிறதோ அவனுடைய மனதில் நானே இந்தப் பொற்காசுகளையெல்லாம் அடைந்தால் எப்படியிருக்கும்! நமது சகோதரனைக் கொன்று விட்டால் என்ன? என்ற எண்ணம் மாறிமாறிச் சுமக்கும் போதெல்லாம் ஏற்படத் தொடங்கியது.

அவ்வளவு வஞ்சகமான எண்ணம் பொற்காசுகளைச் சுமக்கும் போது ஏற்பட்டாலும் உடன் பிறந்த அந்தச் சகோதரர்கள் ஒருவரை மற்றவர் மிகவும் உள்ளன்போடு நேசித்தனர். அவர்களின் உள்ளத்தில் இருந்த ஆழ்ந்த அன்புதான் அவர்களின் மனதில் பணம் காரணமாகத் தோன்றிய பாவ எண்ணத்தைச் செயற்படுத்த முடியாமல் தடுத்து வந்தது. வீட்டின் அருகே வரும்போது ஒரு வேடிக்கை நடந்தது.



பணமூட்டை எவன் தலையில் இல்லாமல் இருந்ததோ அவன் பொற்காசு மூட்டையை வைத்திருக்கும் சகோதரனிடம் அண்ணா! என்னை மன்னித்து விடு. என்னிடம் பணப்பை வந்த போதெல்லாம் உன்னைக் கொன்று விட்டு நானே முழுவதையும் வைத்துக்கொள்ளவேண்டும் என்ற வஞ்சக எண்ணமே எனக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. பாசத்தையே அழிக்கத் தூண்டிய அந்தப் பொல்லாத பொற்காசுகள் எனக்கு வேண்டவே வேண்டாம். அதை நீயே வைத்துக்கொள் என்று கண் கலங்க மனச்சாட்சி உறுத்தக் கூறினான்.

இதைக்கேட்ட அண்ணன் தம்பியை நோக்கி அன்புத் தம்பியே! நான் பொற்காசு மூட்டையைச் சுமக்கும் வேளையில் அந்தத் தீய எண்ணமே எனக்கும் ஏற்பட்டது. இப்படி நமது இருவருடைய சகோதர பாசத்தையும் அழிக்கத் தூண்டும் இந்தப் பணம் எனக்கும் வேண்டவே வேண்டாம். அதை நீயே வைத்துக்கொள் என்றான்.

அதைக்கேட்ட தம்பி அண்ணனை நோக்கி, அண்ணனே! நச்சு எண்ணத்தை உண்டாக்கும் அந்தப் பணம் நம் இருவருக்குமே வேண்டாம். அதைத் தூக்கித் தூர எறிந்து விடுவோம் என்றான்.

வீட்டின் பின்புறம் ஒரு குப்பைக் குழி இருந்தது. இருவரும் அந்தப் பையை குப்பைக் குழிக்குள் எறிந்துவிட்டு அதைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் நிம்மதியான மனதுடன் வீட்டிற்குள் நுழைந்தனர். அதனை மூட வேண்டுமே என்ற எண்ணம் இல்லாமல் வீட்டிற்குள் நுழைந்தனர்.



அப்போது அவர்களின் சகோதரி சில நாட்கள் தங்கிச் செல்ல அங்கு வந்திருந்தாள். அவள் காய்கறிகளை நறுக்கிய குப்பைகளை குப்பைக்குழியில் போட வந்தாள். குப்பைக்குழியைப் பார்த்தவள் ஆச்சரியமடைந்தாள். வாய் கிழிந்த பையிலிருந்து பொற்காசுகள் சிதறிக்கிடப்பதைக் கண்டாள். வேகமாகக் குழிக்குள் கிடந்த காசுகளைத் திரட்டி அதே பையில் போட்டு தன் புடைவைத் தலைப்பில் மறைத்து இடுப்பில் கட்டிக் கொண்டாள். அன்று இரவே அதனை அவள் யாருக்கும் தெரியாமல் தன் கணவன் வீட்டில் சேர்த்துவிடத் திட்டமிட்டாள். அதேசமயம் மூத்த சகோதரனின் மனைவி ஏதோ வேலையாக வெளியே வந்தாள். தனது நாத்தி குப்பைக்குழியில் ஏதோ மறைத்து வைத்ததைக் கண்டு கொண்டாள்.

எனவே அது என்ன என்று அறியும் ஆவலில் அவள் அருகே சென்று நாத்தனாரே! இங்கே என்ன செய்கிறீர்கள்! என்று கேட்டாள். நாத்தநாரின் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது. அண்ணி பொற்காசுகளைப் பார்த்து விட்டாளோ! மற்றவர்களிடம் சொல்லி விடுவாளோ? என்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டு விட்டது.

அப்போது கையிலேயே வைத்திருந்த காய்கறிகள் வெட்டும் கூர்மையான கத்தியால் கொஞ்சம்கூட யோசிக்காமல் அண்ணியின் வயிற்றில் வேகமாகக் குத்தி விட்டாள். அண்ணி பயங்கரமாக அலறினாள்.

மனைவியின் அலறலைக் கேட்டு அவளது கணவன் ஓடோடி வந்தான். அண்ணனைக் கண்ட பயத்தால் நடுங்கிய தங்கை ஓட நினைத்தாள். முடியவில்லை. கால்கள் நகர மறுத்தன. அதே கத்தியால் ஓங்கித் தனது வயிற்றிலும் குத்திக்கொண்டு கீழே சாய்ந்தாள்.

இளைய சகோதரனும் ஓடோடி வந்தான். இரு சகோதரர்களும் அதிர்ச்சியில் நிலை குலைந்து போயினர். அவர்கள் அடைந்த துக்கத்திற்கு அளவே இல்லை. அண்ணன், தம்பி பிறரை ஏமாற்றி பாவத்தால் சம்பாதித்த பொருளைத் தூக்கி எறிந்த பின்னரும் இத்தனை விபரீதங்கள் நமது குடும்பத்தில் நடந்து விட்டனவே என்று கூறிக் கதறிக் கதறி அழுதான்.

அநியாயமாய்ச் சேர்த்த பணம் எவருக்கும் ஆபத்தையே உண்டாக்கும். நேர்மையான வழியில் பொருளீட்டுவதே நிம்மதியைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிபுரம் மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன

## முல்லை. அரச அதிபர் கூறுகின்றார்

வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையத்திலிருந்து மீள்குடியேற்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு முல்லைத்தீவு சூரிபுரம் பிரதேசத்தில் தங்கவைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் யாவும் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இங்குள்ள மக்களுக்கு தற்காலிகமான வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதுடன் இவர்களுக்கான நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ள்ார். இது தொடர்பாக அவர் தெரிவித்தவை வருமாறு,

மெனிக்பாம் நலன்புரி நிலையத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டவர்கள் சூரிபுரம் காட்டுப்பகுதியில் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையில் நடுத்தெருவில் விடப்பட்டிருப்பதாக வெளியாகியிருக்கும் குற்றச்சாட்டுக்களை மறுத்திருக்கும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தேவையான அடிப்படை வசதிகளுடனேயே அவர்கள் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் மேலதிகமான வசதிகள்ளை ஏற்படுத்திக்கொடுக்கும் பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

சூரிபுரம் பகுதியில் தங்க வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு தற்காலிக மலசலகூடங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கும் நிலையில் நிரந்தர மலசல கூடங்களை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு தேவையான நீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. நீர்த்தாங்கிகள் மூலம் நீர் விநியோகம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கும் அதேநேரம் 10 குழாய் கிணறுகளும் 3 கிணறுகளும் அமைப்பதற்கு மீள்குடியேற்ற அமைச்சு நிதி ஒதுக்கியுள்ளது. எதிர்வரும் சில தினங்களில் இப்பணிகளை பூர்த்தி செய்ய இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கேப்பாபிலவு பிரதேசத்தை சேர்ந்த 110 குடும்பங்கள் சூரிபுரம் பகுதியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான தற்காலிக வீடுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கும் பகுதி வசதிகளற்ற காட்டுப்பகுதியல்ல. ஏற்கனவே மீள்குடியமர்ந்த மக்கள் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்ட இடம்.

அடிப்படை வசதிகள் இல்லாத இடமென முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் போலியானவை. இங்கு தங்க வைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கான நிரந்தர வீடுகள் விரைவில் அமைத்துக் கொடுக்கப்படவிருப்பதுடன் இவர்களின் வாழ்வாதாரத்துக்கான விவசாயத்தை முன்னெடுப்பதற்கு 4 ஏக்கர் நிலமும் வழங்கப்படவுள்ளது. இவற்றை கொண்டு அவர்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்கமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## விளம்பரப்படுத்துவதற்கான விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

40 மீற்றர் உயரமான பிரதான வீதி தண்ணீர்தாங்கியின் மேற்பகுதியிலும் 13 மீற்றர் உயரமான குருநகர் தண்ணீர் தாங்கியின் மேற்பகுதியிலும் விளம்பரங்கள் காட்சிப்படுத்துவதற்கு யாழ்ப்பாணம் மாநகரசபை தீர்மானித்துள்ளது.

இவ்வாறு விளம்பர பலகை மூலம் விளம்பரங்களை காட்சிப்படுத்த விரும்புபவர்கள் யாழ்.மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மாநகர சபையின் முதல்வர் திருமதி யோ.பற்குணராசா அறிவித்துள்ளார். (அ-2)



கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக விவசாய மற்றும் பொறியியல் பீட வளாகத்தில் நேற்றைய தினம் காலை சிரமதானப்பணி நடைபெற்றது. இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் மற்றும் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ,பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர் முருகேசு சந்திரகுமார் மற்றிம் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிரமதானப் பணியில் ஈடுபட்டதை படத்தில் காணலாம்.

# கூடங்குளம் அணுமின் நிலையத்தால் இலங்கைக்கு பாதிப்பு ஏற்படாது

## இந்தியா தெரிவிப்பு; ஆராய்கிறது இலங்கை

இந்தியாவின் தமிழகத்திலுள்ள கூடங்குளம் அணுமின்நிலையமானது சுற்றாடலுக்கோ அல்லது அயல் நாடான இலங்கைக்கோ பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்படவில்லையென இந்தியா அறிவித்துள்ளது.

சுற்றாடல் பொதுமக்கள் அணுமின் நிலையப் பணியாளர்கள் மற்றும் அயல் நாடான இலங்கைக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படாத வகையிலேயே இதன் செயற்பாடுகள் காணப்படும்.


அனைத்து தரப்பினரின் பாதுகாப்புக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலைய செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் பரீட்சார்த்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது சுற்றாடலில் கதிர்வீச்சின் செறிவு உள்ளிட்ட அனைத்தும் பரிசீலிக்கப்பட்டன.

அணுசக்தி கட்டுப்பாட்டுச்சபை இதனை அவதானித்து பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளது என்றும் உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் அமைக்கப்பட்டிருக்கும் அனைத்து அணுமின் உற்பத்தி நிலையங்களும் அணுக்கதிர்கள் விரயமாவதை கட்டுப்படுத்தும் வகையில் பாதுகாப்பான முறைகளை கொண்டே அமைக்கப்பட்டுள்ளன. அணுமின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கழிவுகளை அகற்றுவது உள்ளிட்ட அனைத்து பணிகளும் சர்வதேச தரத்திலேயே மேற்கொள்ளப்படுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான அணுசக்தி ஒத்துழைப்பு கதிர்வீச்சுத் தாக்கம் தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கு இலங்கை அதிகாரிகள் குழுவொன்று எதிர்வரும் மாதங்களில் இந்தியா செல்லவுள்ளது. இக்குழு கதிர்வீச்சு தொடர்பிலும் ஆராயும் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)




# பொற்பதி வீதி புனரமைக்கப்படுமா?

கொக்குவில் பொற்பதி வீதி நீண்டகாலமாக சேதமடைந்த நிலையில் பராமரிப்பின்றி போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் உள்ளது. 3 வருடங்களுக்கு முன்னதாக பகுதியளவில் புனரமைக்கப்பட்ட இவ்வீதியின் சிறிதளவான பகுதிகள் தவிர ஏனைய பகுதிகள் மோசமாக சேதமடைந்துள்ளன.

கிராமங்களை இணைக்கும் பிரதான வீதியாகத் திகழும் இவ்வீதியூடாக தினமும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் வாகனங்களும் பயணிக்கின்றன. பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்களுக்கான பஸ் சேவையும் இப்பாதையினூடாகவே சிரமத்தின் மத்தியிலேயே இடம்பெறுகின்றது.

இவ்வீதியில் எமது பொற்பதி அறிவாலயம் எனும் பொதுக் கட்டடத்தொகுதியும் சரஸ்வதி முன்பள்ளி, பொற்பதி விநாயகர் ஆலயம், காளிகோயில், அரசடி விநாயகர் ஆலயம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை விடுதிகள் போன்ற பல முக்கிய நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன.

கடந்த ஜூன் மாதம் 25 ஆம் திகதி சரஸ்வதி மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமையில் இடம்பெற்ற நல்லூர் மற்றும் யாழ்.பிரதேச அபிவிருத்தி தொடர்பான திட்டமிடல் கூட்டத்தில் எம்மால் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டபோது தங்கள் திணைக்களப் பிரதிநிதியால் இவ்வீதியை தற்காலிகமாக உடன் புனரமைப்பதுடன் 2013 ஆம் ஆண்டில் முழுமையாக நிரந்தரமாகப் புனரமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதிமொழி வழங்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டில் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்ற போதிலும் சில இடங்கள் தவிர ஏனைய இடங்கள் மேலோட்டமாக தார் ஊற்றப்பட்டதுடன் பெருந்தொகையான மூலப்பொருட்கள் மீள எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

எனினும், எவ்வித புனரமைப்பு வேலைகளும் இதுவரை நடைபெறவில்லை. எனவே குன்றும்குழியுமாக மிக மோசமாக சேதமடைந்து காணப்படும் இவ்வீதியூடாக பிரயாணம் செய்யும் பொதுமக்களின் சிரமத்தையும் இவ்வீதியின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து இவ்வீதியை உடன் புனரமைத்து தருமாறு தங்களை விநயமாக வேண்டுகின்றோம்.

பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம், கொக்குவில்.



நெடுங்கேணி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான சிறுவர் நாடகப் போட்டியில் வவு/மதியாமடு விவேகானந்த வித்தியாலயம் முதலாமிடத்தை பெற்றுக்கொண்டனர். இந்நாடக அணியினருடன் பொறுப்பாசிரியர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஈபே" லோகோ மாற்றம்

இணையத்தினூடாக வர்த்தகம் மேற்கொள்ளும் தளங்களில் மிகப்பிரபலமானது ஈபே ஆகும்.

அது தனது வியாபாரக் குறியீட்டினை (LOGO) தற்போது மாற்றியுள்ளது.

புதிய தோற்றத்துடன் கூடிய இவ்வியாபாரக் குறியீடானது சுமார் 17 வருடங்களின் பின்னர் மாற்றப்பட்டுள்ளது.

இம்மாற்றமானது தமது புகழ்மிக்க வரலாற்றினையும் வளமான எதிர்காலத்தையும் எடுத்துக்காட்டுவதாக ஈபே தெரிவித்துள்ளது.

இணைய வர்த்தக உலகில் 1995 ஆம் ஆண்டு காலடி எடுத்துவைத்த ஈபே பலகோடிகள் புரளும் தளங்களில் ஒன்றாக தற்போது திகழ்கின்றது. ஈபே சுமார் 28 ஆயிரம் ஊழியர்களைக் கொண்டுள்ளதுடன் கடந்த வருடத்தின் இதன்நிகர வருமானம் 3.229 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.உலகின் மிகப்பெரிய இணையம் ஊடாக வர்த்தகம் மேற்கொள்ளும் இத்தளத்தின் மொத்தச்சொத்து 27 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமென்பது குறிப்பிடத்தக்கது.

# 14 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடியது கூகுள்




சர்வதேச அளவில் தேடல் தளங்களில் தனக்கென தனியிடத்தை பிடித்திருக்கும் கூகுள் தளம் தனது 15 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

கடந்த 1998 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி கூகுள் தளமானது சட்டப்படி பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக தன்னை நிலைநிறுத்தியது.

கடந்த 2005 ஆம் ஆண்டு வரை செப்டெம்பர் 7 திகதியை பிறந்தநாளாக கொண்டாடிய கூகுள் நிறுவனமானது சில ஆதாரபூர்வ தகவலின்படி தனது பிறந்தநாளை செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதியாக மாற்றி கொண்டாடுகின்றது.

சரியான பிறந்தநாள் திகதியினை கண்டுபிடிப்பதற்கு கூகுளிற்கு IBN உறுதுணையாக இருந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# புத்தம் புதிய வசதியை அறிமுகப்படுத்தியது பேஸ்புக்

உலகளாவிய ரீதியில் அதிகளவான பயனர்களை ஆக்கிரமித்துவரும் பிரபல சமூக இணையத்தளமான பேஸ்புக் தனது பயனர்களுக்காக மேலும் ஒரு புதிய வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. அதாவது பேஸ்புக் பயனர்கள் தமது கணக்கின் ஊடாக தேடிய விடயங்களை முற்றாக அழித்து விடும் (Delete search history வசதியே அதுவாகும்.

பயனர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ள இந்த வசதியினை இதுவரை காலமும் பல பயனர்கள் எதிர்பார்த்துள்ள நிலையிலேயே அதனை அறிமுகப்படுத்தி பேஸ்புக் நிறுவனம் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் வென்றுள்ளது.

இதனை பேஸ்புக்கின் Home Page இல் Activity Log எனும் பகுதிக்கு சென்று செயற்படுத்த முடிவதுடன் முந்தைய தேடல் தொடர்பான தகவல்களை பார்க்கவும் முடியும்.

# Automatic Screen Refresh

உங்களது கணனியில் ஏதாவதொரு மாற்றத்தை செய்த பின்னர் கணனி திரை தானாகவே Refresh (Automatic Screen Refresh) ஆகும்படி செய்து கொள்ளலாம். இதற்கு முதலில் Start menu வில் சென்று RUN என்பதில் Regedit என்று கொடுக்கவேண்டும். தற்போது உங்களுக்கு Registry Editor என்ற விண்டோ ஓபன் ஆகியிருக்கும். இதில் கீழே உள்ளது போன்று Update வரை செல்லவும்

HKEY LOCAL MACHINES System Current Control Set Control Update Mode சென்ற பின் வலது பக்கத்தில் உள்ள DWORD என்பதை கிளிக் செய்து அதில் உள்ள Data Value என்பதில் 1 இற்கும் 5 இற்கும் இடையில் விரும்பிய இலக்கத்தை கொடுத்து கணனியை ஒருமுறை Restart செய்யவும்.

இனிமேல் கணனியில் ஏதேனும் மாற்றம் செய்தால் தன்னிச்சையாகவே கணனி திரையானது Refresh ஆகும்.

# புதிய கணனி வடிவமைப்புடன் My Space இணையத்தளம்

பிரபல சமூக வலைத் தளங்களுள் ஒன்றாக விளங்கும் Myspace ஆனது தனது பயனர்களை கவரும் விதமாகவும் பல புதிய அம்சங்களை உள்ளடக்கியதாகவும் நவீன வடிமைப்பில் உருவான இணையத்தளத்தை அறிமுகப்படுத்துகின்றது.

இதன்மூலம் இலகுவான முறையில் பயன்படுத்தக்கூடியதாக காணப்படுவதுடன் தெளிவானதுமான பின்னணியை கொண்டதுமாக காணப்படுகின்றது.

2003 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட இச்சமூக வலையமைப்பானது 2005-2008 வரையான காலப்பகுதியில் இணையப் பாவனையாளர்கள் மத்தியில் மிகுந்த பிரபல்யம் அடைந்திருந்ததுடன் பேஸ்புக்கின் வருகையில்ள பின் தள்ளப்பட்டிருந்தது.

தற்போது Specific Media LLC மற்றும் பிரபல பொப் பாடகர் ஜஸ்ரின் ரிம்பர்லேக் ஆகியோரால் நிர்வகிக்கப்பட்டு வரும் இத்தளம் 25 மில்லியன் பயனர்களை தன்னகத்தே




# Viewsonic அறிமுகப்படுத்தும் Viewpad 97 i Pro டேப்லட்கள்




Viewsonic நிறுவனமானது தனது புதிய தொழில்நுட்பத்தில் அமைக்கப்பட்ட Viewpad 97 i pro எனும் டேப்லட்களை அறிமுகப்படுத்துகின்றது.

விண்டோஸ் 7 இயங்குளத்தை அடிப்படையாக கொண்ட இந்த டேப்லட்கள் 1024× 768 Plxeis கொண்ட IPS தொழில்நுட்பத்தினால் ஆன 9.7 அங்குலமுடைய தொடு திரையினைக் கொண்டுள்ளன.

இவை 9.7'×7.5''×0.6' அளவுடையதாக காணப்படுவதுடன் 2.2 பவுண்ட்ஸ் எடையை உடையனவாகும்.

மேலும் 1.5 GHZ வேகத்தில் செயற்படக்கூடிய Intel Atom N2600 Dual Core Processer 2GB அளவுடைய RAM 1.3 Mexa Pixels உடைய கமெரா போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளன.

இவற்றுடன் நீடித்து உழைக்கக்கூடிய 4900MAh, 2XUSB 2.0 Ports, 1xmicroSD card slot, மற்றும் 1X mini HDMI port ஆகியனவும் காணப்படுகின்றது.

# Virus Total நிறுவனத்தை விலைக்கு வாங்கியது கூகுள்

Virus மற்றும் Malware Program களை Scan செய்து இலவசமாக ஒன்லைனில் முடிவுகளைத் தரும் Virus Total என்ற நிறுவனத்தினை கூகுள் விலைக்கு வாங்கி உள்ளது.

இணைய முகவரிகள்,கணனியின் வன்தட்டில் உள்ள கோப்புக்கள் என எதனைக் குறிப்பிட்டாலும் இலவசமாகவே ஒன்லைன் வழியாக Scan செய்து முடிவுகளை தரும் நிறுவனமாக Virus Total இயங்கி வருகிறது. இந்த செயற்பாட்டிற்காக 40க்கும் மேற்பட்ட AntiVirus குறியீடுகளையும்,வழிகளையும் இந்நிறுவனம் பயன்படுத்தி வந்தது.

தற்போது கூகுள் இதனை வாங்கியதன் மூலம் Virus மற்றும் Malware Program களை தேடி அறிவதிலும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளும் மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகளும் கிடைக்கும் என அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

மேலும் எங்களை தேடிவரும் வாடிக்கையாளர்களை இணையத்தில் பாதுகாப்பாக வைப்பது தான் எங்களுடைய முதன்மையான நோக்கம் எனவும் அறிவித்துள்ளது. இணையத்தில் பாதுகாப்பு என்பது மிக முக்கியமான ஒன்று என்பதால் இந்நிறுவனத்தை விலைக்கு வாங்கி உள்ளதாக கூகுள் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநீதி இழைப்பவன் அநீதிக்கு உட்பட்டவனை விட அதிக துயரமடைவான்.

~ பிளாட்டோ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பரத குணமுள்ளவர்களை எங்கள் பக்கம் ஒன்று சேருங்கள்

பரதன் நாடாள வேண்டும். இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டும் என்பது கைகேயின் கோரிக்கை.

கைகேயின் கோரிக்கையை நிராகரிக்க முடியாத தசரதச் சக்கரவர்த்தி தாளாத் துன்பத்துடன் அதற்குச் சம்மதம் தெரிவிக்கின்றார்.

புனிதரான இராமர் தன் தந்தை, கைகேயிக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக காடு செல்கின்றார் என்பது இராமாயணம் கூறும் செய்தி.

இராமர் காட்டுக்குச் செல்லும் செய்தி அறிந்த தசரத மன்னனின் உயிர் பிரிகிறது.என்னே விதி!

பரதனுக்கு முடி சூட்டவேண்டும். இராமன் 14 ஆண்டுகள் காடாள வேண்டும் என்ற கோரிக்கையை கைகேயி கேட்ட கணத்தில், மன்னன் தசரதனுக்கு மாரடைப்பு ஏற்பட்டு அவர் உயிர் பிரிந்திருந்தால் கைகேயியின் கோரிக்கை நிறைவேறியிருக்காது.

என்ன செய்வது! இராமன் காடு செல்லும் செய்திக்குப்பின்புதான் தசரதன் மரணிக்கின்றான்.

இது முதல் நடந்திருந்தால் அது நடந்திருக்காது. அது நடந்ததால் இது நடந்தது.

எதுவாயினும் இராமர் காடு செல்வதால் கைகேயிக்கு எந்த நன்மையும் கிடையாது.

அது கூனியின் விருப்பம். கைகேயியைப் பொறுத்தவரை பரதன் நாடாள வேண்டும். ஆனால், அது நிறைவேறவில்லை.

பரதன் நாடாள வேண்டும் என கைகேயி நினைத்திருந்தாலும், பரதனிடம் அப்படியொரு நினைப்பு அறவே இல்லை.

அதனால் கைகேயி பதின்னான்கு ஆண்டு கள் துன்பத்தில் துவண்டாள். தன் பாசமுள்ள மகன் பரதனின் வெறுப்புக்கு ஆளானாள்.

புனிதரான இராமன் பதின்னான்கு ஆண்டுகள் காட்டில் வாழ்ந்தார் என்பதற்கு அப்பால், 14 ஆண்டுகள் கைகேயி துன்பத்தை அனுபவித்தாள் என்ற யதார்த்தத்தை எவரும் நினைத்துப் பார்ப்பதில்லை.

தண்டனை தந்தவன் நிம்மதியாக வாழ்கிறான் என்று யாரும் நினைத்துவிடக் கூடாது.

போரில் தோற்றவனை விட வென்றவனுக்கே துன்பம் அதிகம் என்பது கௌதம புத்த பிரானின் போதனை.

ஆக! கைகேயின் சூழ்ச்சித்தனத்தை வெறுத்த பரத குணம் அற்புதமானது.

தாயின் சொற்படி பரதன் பட்டாபிஷேகம் செய்திருந்தால் பதின்னான்கு ஆண்டுகளின் பின், இராவணனைத் தோற்கடித்த இராமர் அயோத்தியில் பரத படைகளால் கொல்லப்பட்டிருப்பார். இங்குதான் தெய்வீகம் பேசுகிறது.

சூழ்ச்சி செய்தவர்களை, வலி தந்தவர்களை வதைக்கின்ற பரத குணங்கள் இருப்பதால் தமிழர்கள் அஞ்சத் தேவையில்லை.

அவர்கள் செய்யவேண்டியதெல்லாம், தென்பகுதியில் இருக்கக்கூடிய கைகேயிகள் ,கூனிகளின் உறவை விடுத்து, பரத குணம் உள்ளவர்களை இனங்கண்டு அவர்களை எங்கள் பக்கம் ஈர்க்க வேண்டும். அதுவே எங்களை நாடாள வைக்கும்.

## நிதி ஒதுக்கீட்டு சட்ட வரைபுக்கு அமைச்சரவை அனுமதியளிப்பு

(கொழும்பு)

2013 ஆம் நிதி ஆண்டுக்கென நிதி அமைச்சர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சமர்ப்பித்த நிதி ஒதுக்கீட்டு சட்ட வரைபுக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது. ஒவ்வொரு அமைச்சுவரி பிறநடுநிலை விடயங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு யதார்த்தமான வரவு -செலவுத் திட்டத்தை உருவாக்கும் வகையில் குறித்த மசோதா தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2013-2015 நடுத்தர கால செலவு கட்டமைப்பு அடையாளம் முன்னுரிமைகள் மற்றும் ஏற்கெனவே தொடங்கியது மற்றும் நடந்து வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களை நிறைவு செய்தல் குறித்து இதில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 2013 இல் அரசின் செலவு 2520 பில்லியன் ரூபா என கணிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சி மற்றும் பணவீக்கம் என்பவற்றை 7% பேண எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

வரவு -செலவுத் திட்ட முதல் வாசிப்பு ஒக்டோபர் 9ம் திகதி பாராளுமன்றில் சமர்பிக்கப்படவுள்ள நிலையில் இரண்டாம் வாசிப்புக்கென வரவு-செலவுத் திட்டம் நம்பர் 8ஆம்திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (அ-2)

## சீனாவிடம் கடன்பெற்ற ரயில் நேற்று சேவையில்

சீனாவில் இருந்து கடன் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள மின் தொகுப்பு ரயில் நேற்று தொடக்கம் சேவையில் ஈடுபடுத்தப்படும் என புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சீனாவிடம் கடனாகப் பெறப்பட்டுள்ள 13 மின் தொகுப்பு ரயில்களில் 5 இதுவரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இதில் நான்கு ரயில்கள் களனிவெலி பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

மற்றைய ரயில் மலைநாட்டு ரயில் பாதையில் சேவையில் இணைக்கப்படவுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-2)

## கல்லூரி மாணவன் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்கானார்!

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத இளைஞர் கும்பலின் வாள் வெட்டுக்கு இலக்காகி மாணவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளான்.

வீதியில் தனியே நடந்து சென்று கொண்டிருந்த மாணவனை பின் தொடர்ந்து சென்ற இளைஞர்களே மாணவனின் பின்தலைப் பகுதியில் வாளினால் வெட்டியுள்ளனர்.

யாழ்.மத்திய கல்லூரில் தரம் 11இல் கல்வி பயிலும் காரைக்கால் இணு விலைச் சேர்ந்த சிவா தினேஸ் காந்த் என்ற மாணவனே படுகாய மடைந்தவராவார்.

குறித்த மாணவன், காரைக்கால் வீதியால் சென்று கொண்டிருந்த போது, பின்னால் வந்த இளைஞர்கள் தன்னை வாளினால் வெட்டியதா கவும் எனினும் வெட்டியதற்கான காரணமும் வெட்டியவர்களையும் தனக்குத் தெரியாது என படுகாயமடைந்த அம் மாணவன் தெரிவித்தார்.

அண்மைக் காலமாக யாழில் இவ்வாறான வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ந-4)

## தனியார் பேருந்து குடை சாய்ந்து

(பூந்தோட்டம்)

வவுனியா - புதுக்குடியிருப்பு நோக்கி சுமார் 50 பயணி களுடன் பயணித்த தனியார் பேருந்து ஒன்று நேற்று மாலை 6 மணியளவில் ஓமந் தைப் பகுதியில் விபத்துக்குள்ளாகி குடைசாய்ந்துள்ளது.

இவ்விபத்துச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்ததுடன் ஏனையவர்களில் சிலர் சிறுகாயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

வவுனியா சாந்தசோலையைச் சேர்ந்த குடும்பஸ்தரான சரவணன் (வயது-32) என்பவரும் தென்பகுதியைச் சேர்ந்த சமந்த சியசங்க (வயது-22) என்ற இராணுவ வீரருமே படுகாயமடைந்தநிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடும் மழை காரணமாக பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால் இவ்விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகின்றது. (ந-266)

## பிக்கப் - மோ.சைக்கிள் விபத்து; குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம்

இராணுவத்தினரின் பிக்கப் வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்துள்ளார்.இவ்விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை 9.00 மணியளவில் பலாலி வீதி கோண்டாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் உரும்பிராயைச் சேர்ந்தவரும் 4 பிள்ளைகளின் தந்தையுமான விஸ்வாசம் ஜெகநாதன் (வயது-66) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது அருகில் வந்த இராணுவத்தினரின் பிக்கப் வாகனத்துடன் விபத்து நேரிட்டுள்ளது.

சுயநினைவு அற்ற நிலையில் இருந்த அவரை இராணுவத்தினரே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்துள்ளனர்.

தற்போது அவர் நினைவு திரும்பிய நிலையில் அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார். (ந-4)




ஆணும் பெண்ணுமாக அமர்ந்திருக்கும் அழகுக்கோலம் காண்போர் மனத்தைப் பரவசப்படுத்தும். அவ்வாறு அமர்ந்திருக்கும் போது பெண்ணின் தோற்றத்திலே பார்வை முதலில் படுவது மனித இயற்கையாகும். மணிவாசகரும் இதற்கு விதிவிலக்கில்லையே. அதனால் இறைவனும் இறைவியும் அமர்ந்திருக்கும் திருக்கோலத்தைக் காணும்போது அவருடைய பார்வை இறைவியின் கோலத்திலே தான் முதலில் பதிகிறது. எனவே அவருடையபாடல் *மையிலங்கு நற் கண்ணி பங்கனே* எனத் தொடங்குகிறது. மையார்ந்த திருக்கண்கள் உமையம்மையின் கண்கள். சாதாரணமான கண்ணுக்கிடுகின்ற மையானது இறைவியின் கண்களைச் சேர்ந்தவுடன் சிறப்பாக விளக்கமாகத் தோன்றுகிறது. அத்தகைய சிறப்பான, குளிர்மையான திருக்கண்களையுடைய பார்வதியின் ஒரு பாகமாக இறைவன் இருக்கிறான். இந்த அர்த்தநாரீஸ்வர வடிவத்தை வேறு எங்குமே காணமுடியாது. தேவியின் கண்கள் நற்கண்கள். எப்போதும் அருள் செய்யும் கண்கள்.


அருகிலமர்ந்த இறைவன்திருவெண்ணீற்றை அணிந்த திருமேனியுடையவனாக இருக்கிறான். அப்பர் இத்தோற்றம் இன்னும் விளக்கமாகப் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறு அணிந்த அழகுத் தோற்றம் எனக் கூறியுள்ளார். அத்தகைய இறைவன் குருவடிவாக வந்து மணிவாசகரைத் தொண்டனாக ஏற்றுக்கொண்டான். அப்படி ஆட்கொண்டமையை உருவகப்படுத்திக் காட்டுகிறார். குழந்தையின் கையிலே இருக்கின்ற பொற்கிண்ணம் என்று நான் உன்னை எளிமையாக எண்ணிவிட்டேன். விலை மதிப்பற்ற பொருளை என் குழந்தை மனத்தால் உணர்ந்துகொள்ளத் தவறிவிட்டேன். நீ பெறுவதற்கு மிகவும் அரியவன் என்ற எண்ணமே எனக்கு ஏற்படவில்லையே. குழந்தையின் கையிலே கொடுக்கப்பட்ட பாலுணவையுடைய பொற்கிண்ணத்தை அதனுடைய பெறுமதியைத் தெரியாமல் நழுவவிட்டுப் பாலுணவையும் உமிழ்ந்து கிண்ணத்தையும் சிதைப்பது போல நான் இருந்துவிட்டேன். இங்கு பொற்கிண்ணத்திலே உமையம்மை ஊட்டிய் திருமுலைப் பாலை உண்டு ஞானசம்பந்தம் பெற்ற குழந்தையை மணிவாசகர் நினைக்கிறார். மெய்யாக அன்பு பூண்ட அடியவர்கள் எல்லோரும் இறைவனிடம் சென்று சேர்ந்து விட்டார்கள். ஆனால் என்னைப் பொய்யாகிய உலக வாழ்க்கையிலே புகும்படி விட்டுவிட்டு நீ சிவபுரத்துக்கு எழுந்தருளி விட்டாயே' என்று கேட்கிறார். என் வாழ்வியலை நீயே மாற்றவேண்டும். எளிமையாக வடிவெடுத்து வலிய வந்து ஆட்கொண்ட பின் இவ்வாறு என்னைத்தனியே விட்டுத் தெரியாமல் நீ விலகி நிற்கலாமோ? இது உன்னுடைய திருவருள் திறத்திற்குப் பொருத்தமற்ற செயலன்றோ. ஆதலால் நீ என்னையும் உடன் கொண்டு செல்ல வேண்டும் என்பதே அவருடைய வேண்டுதலாக உள்ளது. நீ பெறுவதற்கு அரி

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**


யவன் என்பதை உணர்ந்து கொள்ளாமை என் தவறே. நான் உன்னுடைய அருமை அறியாமல் குழந்தை போலவே இன்னும் இருக்கிறேன். எனவே நீ மீண்டும் வந்து என்னை ஆட் கொள்ள வேண்டும். அவருடைய மனதிலே இறைவன் ஞானாசாரியனாக மீண்டும் வழிகாட்ட வேண்டும் என்பதே உறுதியான வேண்டுதலாக உள்ளது. அதுவே எமக்கும் தேவை.

*மையிலங்கு நற் கண்ணி பங்கனே*
*வந்தெனைப் பணி கொண்ட பின் மழக்*
*கையிலங்கு பொற் கிண்ணம் என்றலால்*
*அரியை என்றுனைக் கருதுகின்றிலேன்*
*மெய்ய லங்குவெண் ணீற்று மேனியாய்*
*மெய்ம்மை அன்பருள் மெய்ம்மை*
*மேவினார்*
*பொய்யில் அங்கெனைப் புகுதவிட்டு நீ*
*போவ தோசொலாய் பொருத்த மாவதே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நியூஸ்ரார் பிறீமியர் லீக் கிரிக்கெட் போட்டி; கே.சி.சி.சி,சென்றலைட்ஸ் அணிகள் வெற்றி






(யாழ்ப்பாணம்)

நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் நியூஸ்ரார் பிறீமியர் லீக்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டிகளில் கே.சி.சி.சி மற்றும் சென்றலைட்ஸ் அணிகள் வெற்றி பெற்றன. முதலாவது போட்டியில் கே.சி.சி.சி. அணியும் யூனியன்ஸ் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. அணி இருபது ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் பங்குயன் 58, உத்தமன்,48 சாம்பவன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அருண் 2, கபில் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர். 176 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்று 35 ஓட்டங்களால் தோல்வியடைந்தன. துடுப்பாட்டத்தில் ஆய்சன் 37, ஜான்சன் 22, பிரசாந்தன் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சிலோஜன் 2, சாம்பவன் 2 இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக கே.சி.சி.சி. அணியின் பங்குயன் தெரிவானார். இரண்டாவது போட்டியில் ஜொலிஸ்ரார் அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலி ஸ்ரார் அணி இருபது ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மணிவண்ணன் 52, உமாநாத் 40, சைலேஸ் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கோகுலன் 2 விக்கெட்டைக் கைப்பற்றினார். 164 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 19.5 ஓவர்களில் 9 விக்கெட்டை இழந்து 164 ஓட்டங்களைப்பெற்று ஒரு விக்கெட்டால் வெற்றிபெற்றனர்.

துடுப்பாட்டத்தில் மயூரன் 34, கோகுலன் 26, செல்ரன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் லக்ஸ்மிகாந்த் 3, சஞ்சித் 2 இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சென்றலைட்ஸ் அணியின் மயூரன் தெரிவானார். (23)

# பருத்தித்துறை ஐக்கிய வி.க 20-20 கிரிக்கெட்போட்டி; நெற்கொழு கழுகு அணி சம்பியன்



(கரவெட்டி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழகத்தின் 20:20 வெற்றிக் கிண்ணத்தை கரவெட்டி ஞானம்ஸ் அணியை 54 ஓட்டங்களினால் தோற்கடித்து நெற்கொலு கழுகு அணி சம்பியனா கியது.

பரு. ஐக்கிய விளையாட்டுக் கழகம் வடமராட்சிக்குட்பட்ட 36 அணிகளுக்கிடையிலான 20:20 கிரிக்கெட் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பரு. ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் மாலுசந்தி மைக்கல் அணியை தோற்கடித்து நெற்கொலு கழுகு அணியும் 2ஆவது அரையிறுதி ஆட்டத்தில் பொலிகண்டி விண்மீன் அணியை தோற்கடித்து கரவெட்டி ஞானம்ஸ் அணியும் இறுதியாட்டத்திற்கு தெரிவாகின. இறுதியாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய நெற்கொலு கழுகு அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 85.ஓட்டங்களைப் பெற்றனர். இதில் கோகுலன் 51 ஓட்டங்களையும் அனோஜன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். ஞானம்ஸ் அணியின் பந்து வீச்சு சார்பில் சேந்திரன் 3, அனுசயந்தன் 2,துஸ்யந்தன் ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி 15.3 ஓவர்கள் நிறைவில் 31 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தனர். இதில் துஸ்யந்தன் 6ஓட்டங்களைப் பெற்றார். கழுகு அணியின் பந்து வீச்சின் சார்பில் கோகுலன் 4,செந்தூரன் 2,நந்தபாலன், ரமேஸ் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இறுதியில் 54 ஓட்டங்களினால் ஞானம்ஸ் அணியைத் தோற்கடித்து நெற்கொலு கழுகு அணி பரு. ஐக்கிய விளையாட்டு கழகத்தின் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது. (9-24)

# அளவெட்டி மத்தி வி.க. கிரிக்கெட் போட்டி; கரவெட்டி ஞானம்ஸ் அணி சம்பியன்







அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் மிகப் பிரமாண்டமாக நடத்திய மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை மகாஜனக்கல்லூரி மைதானத்தில் மிகவும் கோலாகலமாக நடத்தப்பட்டது.

இறுதிப்போட்டியில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் அணியினர் பலப்பரீட்சை நடத்தினர். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணியினர் அதிரடியாக ஆடி ஓட்டங்களை பெற்றபோதும் விக்கெட்டுக்களையும் இழந்து வந்தனர். இறுதியில் 11 ஓவர்களில் சகல விக்கெட்டையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் ரமேஸ் 17, அனுரதன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பிரதாபன் 3 விக்கெட்டை கைப்பற்றினார். 75 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாட களமிறங்கிய றோயல் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது. ஞானம்ஸ் அணியின் பந்துவீச்சுக்கு முகம்கொடுக்க முடியாமல் றோயல் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். ஒரு கட்டத்தில் 15 ஓட்டங்களுக்கு 5விக்கெட்டை இழந்து தடுமாறினர். இறுதியில் றோயல் அணி 11.2 ஓவர்களில் சகல விக்கெட்டையும் இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றதனால் ஞானம்ஸ் அணி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்று அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் மிகப் பிரமாண்டமாக நடத்திய மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டனர். துடுப்பாட்டத்தில் சதீஸ் 14 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சுவர்ணன் 4 விக்கெட்டை கைப்பற்றினார். இவ்விறுதிப் போட்டியில் அதிக சிக்ஸர்கள் அடித்தமைக்காகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் ஞானம்ஸ் அணியின் ரமேசும் [illegible] ஞானம்ஸ் அணியின் சுவர்ணனும் இத் தொட ரில் ஹெட்ரிக் சாதனை படைத்தமைக்காகவும் மனங்கவர் வீரர் [illegible] றோயல் அணியின் நிருபனும் தெரிவு செய்யப்பட்டனர். (23-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பர் 8 முதல் போட்டியில் இலங்கை வெற்றி

விறுவிறுப்பான சுப்பர் 8 முதல் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்றுள்ளது.

ஐ.சி.சி உலகக் கிண்ண இருபது-20 போட்டியின் சுப்பர் 8 போட்டிகளின் நேற்றைய ஆரம்பப் போட்டியில்இலங்கை--நியூசிலாந்து அணிகள் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டி சமநிலையில் முடிபடைந்ததால் சுப்பர் ஓவர் நிர்ணயிக்கப்பட்டது.

சுப்பர்ஓவரில்அபாரமாகசெயற்பட்ட இலங்கை அணி வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

பல்லேகல மைதானத்தில் நேற்று ஆரம்பமாகிய போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக றோப் நிகோல் 40 பந்துகளை எதிர்கொண்டு 4 ஆறு ஓட்டங்கள் 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 58 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

பந்துவீச்சில் நேற்றைய போட்டியில் அறிமுகமாகிய தனஞ்சய மற்றும் நுவான் குலசேகர ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

அஜந்த மெண்டிஸ், லசித் மலிங்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

175 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 174 ஓட்டங்களை பெற்றுக் கொண்டதால் போட்டி சமநிலையானது.




இலங்கை அணி சார்பில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய டில்ஷான் 3 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் அடங்கலாக 53 பந்துகளில் 76 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்துவீச்சில் ஜேம்ஸ் பிறாங்லின் 2 விக்கெட்டுகளையும், ஜேக்கப் ஓரம் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

ஓட்ட எண்ணிக்கை சமநிலையில் முடிந்ததால் எந்த அணி வெற்றிபெறும் என்பதை நிர்ணயிக்கும் சுப்பர் ஓவர் வழங்கப்பட்டது.

சுப்பர் ஓவரில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 1 விக்கெட்டினை இழந்து 13 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

14 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 1 விக்கெட்டினை இழந்து 8 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதால் இலங்கை வெற்றி பெற்றது.

நேற்றைய போட்டியின் நாயகனாக இலங்கை அணி சார்பில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய திலகரட்ண டில்ஷான் தெரிவு செய்யப்பட்டார்.

# போராடி வென்றது மே.தீவுகள்




இங்கிலாந்து-மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான விறுவிறுப்பான சுப்பர் 8 போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் 15 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் நிர்ணயிக் கப்பட்ட 20 ஓவர்களில் 179 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

அதிகபட்சமாக சார்ல்ஸ் 84 ஓட்டத்தினையும்கிறிஸ்ஹெயில் 58 ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் பிரோட் 2 விக்கெட்டினைக் கைப்பற்றினார்.

180 ஓட்டத்தினை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, 20 ஓவர்களில் 4 விக்கெட்டினை இழந்து 164 ஓட்டத்தினை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

அதிகபட்சமாக மோர்கன் ஆட்டமிழக்காமல் 71 ஓட்டத்தினையும், ஹேல்ஸ் 68 ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் ராம்போல் 2 விக்கெட்டினை கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் ஜோன்சன் சார்ல்ஸ் தெரிவானார்.

---


## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும்

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

எனும் சமூக சேவை அமைப்பில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

- ♦ **நிர்வாக உத்தியோகத்தர்**
  (இருபாலாரும், ஓய்வுபெற்ற அரச/ தனியார் உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வயது 45 இற்கு மேல்)
- ♦ **முகாமைத்துவ உதவியாளர்கள்**
  (இருபாலாரும், கணனி அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
  வயது 30 - 45)

**பொதுத் தகைமை**

சமூக சேவை நோக்கம் கொண்டவராக இருத்தல் மிகவும் அவசியமானதாகும்.

பொருத்தமான தகைமை உடையவர்கள்

**விளம்பர இல. சி-1156**
**மே/பா வலம்புரி**
**இல. 3, 2ம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**

எனும் முகவரிக்கு தொலைபேசி இலக்கம் உட்பட தமது சுயவிபரம் அடங்கிய விண் ணப்பத்தை அனுப்பி வைக்கவும்.

இயக்குநர் சபை

(C-1156)


## த.தே.கூட்டமை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்காக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கதவுகள் திறந்தே இருக்கின்றன.

ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதே தமது பிரதான இலக்கு.

நாட்டை அபிவிருத்தி செய்வதிலேயே எனது கவனம் முழுவதையும் செலுத்தி வருகின்றேன். எவரையும் அரசியல் ரீதியாக பழி வாங்கும் எண்ணம் எனக்குக் கிடையாது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் எவர் வேண்டுமானாலும் இணைந்து கொள்ள முடியும் என்ற கொள்கையில் ஒரு போதும் மாற்றம் கிடையாது என அவர் தெரிவித்தார்.

மேலும் அண்மையில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு சிங்களவர்கள் மட்டும் வாக்களிக்கவில்லை. கூடவே தமிழர்களும், முஸ்லிம்களும் வாக்களித்துள்ளனர்.

இதன்மூலம் அரசாங்கத்தின் மீதானமக்களின் நம்பிக்கை வெளிப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

## பல தமிழ்க்...

கூட வரை படத்திலிருந்து அகற்றப்பட்டுக் கொண்டு இருப்பதும் அனைவருக்கும் தெரிந்ததே.

இவ்வாறு தமிழ்க் கிராமங்கள் அகற்றப்படுகின்றதென்றால் தமிழர்களின் இருப்பு, வரலாறு, பாரம்பரியம், கலாசாரம் ஆகியனவும் அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றதென்பதே பொருள்.

சுவரின்றி சித்திரம் வரைய முடியாது. அந்த வகையில் எமது சுவர் எமது மண். எனவே மண்ணிருந்தால்தான் நாம் ஒரே இனமாக வாழ முடியும். நாம் ஒரே இனமாக வாழக்கூடாது, வாழ முடியாதென்ற அகங்காரம் காரணமாகத்தான் மகிந்த அரசாங்கம் தமிழர்களை அவர் களது கிராமத்திற்கு செல்ல முடியாது தடுத்துக் கொண்டிருக்கின்றது.

யுத்தம் முடிந்து 3 ஆண்டுகள் ஆகின்றன என அரசாங்கம் தெரிவிக்கின்றது. அதுவும் அண்மையில் கிளிநொச்சியில் ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார் தெற்கிலுள்ள மக்கள் அனுபவிக்கின்ற சுதந்திரத்தை வடக்கு மக்களும் அனுபவிப்பதாக. ஆனால், தெற்கிலுள்ள சிங்கள, முஸ்லிம் மக்கள் பெற்றுள்ள சுதந்திரம் வடக்கிலுள்ள மக்கள் அனுபவிக்கவில்லை என்பதை கண்கூடாகக் காண முடிகின்றது.

தமிழர்கள் சொந்த மண்ணுக்கு செல்ல முடியவில்லை. சொந்த மண்ணில் விவசாயம் செய்ய முடியவில்லை. இவை சுதந்திரமுமில்லை; உரிமையுமில்லை.

தெற்கு மக்களுக்குள்ள அனைத்துச் சுதந்திரமும் வடக்கில் அழிக்கப்படுகின்றது. இதற்காகத்தான் நாம் ஜனநாயக ரீதியாகப் போராடுகின்றோம். [illegible] எமக்குள்ள ஒரே வழி ஜனநாயக ரீதியாக [illegible] ஒலிக்கச் செய்வதே என்றார். (ந-11)

## இன்றைய போட்டி வெற்றி யாருக்கு?

### இந்தியா-அவுஸ்திரேலியா

இந்திய உப கண்ட ஆடுகளங்களில் இந்திய அணி பலமான துடுப்பாட்ட அணி. குறிப்பாக அண்மைக்காலங்களில் சோபிக்கத் தவறிய சேவாக் பெரிய அதிரடியைக் கொடுப்பார் என நம்பலாம். காம்பீர், ஹோலி, யுவராஜ், எம்.எஸ்.தோனி ஆகியோர் நிச்சியமாக பெரியதொரு இலக்கினை பிரேமதாச ஆடுகளத்தில் கொடுப்பர் என எதிர்பார்க்கலாம்.

அவுஸ்திரேலியாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் வோட்சன், வோர்னர் சர்வதேச மட்டத்தில் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர்களாக இருந்தபோதும், இந்தியாவின் சுழல் பந்துக்கு தாக்குப் பிடிப்பார்களா என்பது கேள்விக்குறியே.

இந்தியாவின் பந்துவீச்சு, சுழல் பந்துவீச்சாளர்களிலும் பகுதிநேர பந்து வீச்சாளர்களிலும் தங்கியுள்ளது. அவுஸ்திரேலியா வேகப்பந்து வீச்சில் தங்கியுள்ளது.

களத்தடுப்பைப் பொறுத்தவரை அவுஸ்திரேலியாவின் களத்தடுப்பு சற்று உயர்வானது.

ஆடுகளம் சுழல் பந்துக்கு மிகச் சாதகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாலும் வெற்றி வாய்ப்பு இந்தியாவுக்கு இருப்பதாகத்தான் கூறலாம்.

### பாகிஸ்தான் - தென்னாபிரிக்கா

பாகிஸ்தானின் நசீர், அப்ரிடி,அக்மல் அதிரடி வீரர்கள் பிரேமதாச ஆடுகளத்தில் மிகச் சிறந்த துடுப்பாட்டத்தை காண்பிப்பார்கள் என நம்பலாம்.

தென்னாபிரிக்காவின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் மிகவும் குறைந்த நேரத்தில் கூடிய ஓட்டங்களை எடுக்கக் கூடியவர்கள்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் பலம் சுழல்பந்தில் தங்கியுள்ளது.

அஜ்மல், அப்ரிடி, ஹபீஸ் ஆகியோரின் சுழல் பந்து ஓவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு சிம்ம சொப்பனமாக இருக்கும்.

அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சு ஆர்.பிரேமதாச ஆடுகளத்தில் பாகிஸ்தானுக்கு ஒரு சவாலாக இருக்கப்போவதில்லை.

களத்தடுப்பில் அவுஸ்திரேலியாவே சிறந்த அணியாகக் கருதப்படுகிறது.

பாகிஸ்தான் அணி வீரர்களின் சுழல் பந்து பாகிஸ்தான் அணிக்கு வெற்றியை ஈட்டிக் கொடுக்கும் என்றே கூறலாம்.

இதேவேளை நேற்றைய வலம்புரி, இலங்கை மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுக்கே வெற்றி வாய்ப்பு உண்டு எனக் கூறியிருந்த நிலையில், நேற்று அவ் அணிகளே வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. - ஏ.தர்மா

பாகிஸ்தான்-தென்னாபிரிக்கா பி.ப.3.30
இந்தியா-அவுஸ்திரேலியா பி.ப. 7.30

## எமது இனத்...

தாயகம் எங்களுடைய தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றையும் ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரிக்க வேண்டும்.

தமிழர்கள் இம் மண்ணிலே அநியாயமாக கொல்லப்படுகின்றார்கள். தமிழர்கள் இம் மண்ணிலே புதைக்கப்படுகின்றார்கள். அவர்களுடைய நிலம் அபகரிக்கப்படுகின்றது. இவை அவர்கள் நிர்மூலமாக்கப்படுகின்றார்கள் என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

எனவே, இவற்றை சர்வதேசத்தின் கவனத்திற்கு கொண்டுவரும் வகையிலேயே நாம் இப் போராட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

எமது இனத்தின் விடுதலை, எமது இனத்தின் வாழ்வுக்காக தொடர்ந்து போராட்டங்களை தமிழர் பகுதியெங்கிலும் நடத்துவோம் என்றார். (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இராணுவமே வெளி...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நேற்றுக்காலை 10.30 மணியளவில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

கிளிநொச்சியின் பூர்வீக கிராமங்களான பரவிப்பாஞ்சான், இரணைதீவு, கிருஷ்ணபுரம் மத்தி, மருதநகர் மேற்கு ஆகிய பிரதேசங்கள் தற்போதும் இராணுவக்கட்டுப்பாட்டிலேயே உள்ளன எனவும் காணாமல் போன உறவினர்களின் கோரிக்கையை முன் வைத்துமே இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இவ் ஆர்ப்பாட்டத்தின் போது பதில் சொல்லு பதில் சொல்லு அரசே பதில் சொல்லு, இராணுவமே வெளியேறு, எமது நிலம் எமக்கு வேண்டும், தமிழர் தேசத்தை ஐ.நாவே அங்கீகரி, வாழவிடு வாழவிடு வலியின்றி வாழவிடு போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

காணாமல் போனோரின் புகைப்படங்களை வைத்துக்கொண்டு அவர்களின் பெற்றோர், உறவினர்கள் கதறி அழுவதைக் காணக்கூடியதாகயிருந்தது.

இவ்வார்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பெருமளவான பொலிஸாரும், புலனாய்வுத் துறையினரும் குவிக்கப்பட்டு கோஷமெழுப்புவதில் முன்னிலையாகச் செயற்பட்டவர்களையும், கதறி அழுகின்ற பெற்றோர்களையும் படம் பிடிப்பதில் அதிகமாக ஈடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்ததாக அங்கிருந்தவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிறிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் மற்றும் கட்சிகளின் பிரதிநிதிகள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-9,254)


யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
தேசிய பாடசாலை
தரம் 6 அனுமதி - 2013
மேற்படி கல்லூரியின் 2013ஆம் கல்வி ஆண்டின் தரம் 6 வகுப்பு (தமிழ்/ஆங்கில மொழிமூலம்) அனுமதிக்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பாடசாலை அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
விண்ணப்ப இறுதித் திகதி : 2012.10.15
- அதிபர் -
(சி-1169)

Maya DOT VFX
நிறுவனங்கள் இணைந்து வழங்கும்
webster networks MAKING DREAMS REALITY
இலவசக் கருத்தரங்கு
யாழ்.நகரில்
Web Development and Multimedia
துறையில்
கற்கைகளும் தொழில் வழிகாட்டலும்
30.09.2012 காலை 9.00 மணி, யாழ். நாவலர் கலாச்சார மண்டபம்
0750393776 (510) 0779471771

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
விசேட கட்டணக் கழிவு

BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months

Spoken English With Grammar - Quick Learning Course 1 1/2 Months
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Diploma In English 2 Months
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

புதிய வகுப்புக்கள்
Batch-4 29/09/2012 @ 11.00am (Week end )
Batch-5 01/10/2012 @ 9.00am (Week Days)

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya.
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074
(சி-1170)


# பல்கலைக்கழக போராட...

சிரேஷ்ட பேராசிரியரின் சம்பளம் 170,000 ரூபாயாகும் எனவும் இது ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியின் சம்பளத்தைவிட அதிகமானது எனவும் ஒரு விரிவுரையாளரின் சம்பளம் 54.03 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் இது 75, 000 ரூபாயிலும் கூடுதலானது எனவும் அமைச்சர் கூறினார்.

தொழிற் சங்கங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டுவிட்டதாகவும் 5 சதவீதமான பல்கலைக்கழக ஆசிரியர்களே இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் அவர் கூறினார். 95 சதவீத மாணவர்கள் இந்த தொழிற் சங்க நடவடிக்கை நியாயமற்றது என உணர்ந்து விட்டனர் என அவர் கூறினார்.

பரஸ்பர விட்டுக்கொடுப்பின் மூலம் நாம் அவர்களோடு பேச எந்த நேரத்திலும் தயாராகவுள்ளோம். இந்தப்பிரச்சினையை பரஸ்பர விட்டுக்கொடுப்பின் மூலம் தீர்க்க தயாராகவுள்ளோம். அவர்களின் எதிர்ப்பு ஊர்வலம் முடிவுக்கு வந்தபின் நாம் அவர்களோடு பேசுவோம். நாம் சர்வதேச தாக்கத்திற்கு ஏற்ப கல்விக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்க தயாராகவுள்ளோம் என அமைச்சர் கூறினார்.

இதேவேளை பல்கலைக்கழக பேராசிரியர்களின் போராட்டம் அரசவிரோத செயலாகவே கருதப்பட வேண்டும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கப் பயிற்சி முறைமையை பகிரங்கமாக விமர்சித்து, உயர்தரப் பரீட்சை வினாத்தாள் மதிப்பீடுகளை புறக்கணித்து பல்கலைக்கழக பேராசிரியர்கள் முன்னெடுத்து வரும் தொழிற் சங்க போராட்டம் அரச விரோதமானது.

இந்த அரச விரோத சூழ்ச்சித்திட்டத்தை மக்கள் நிராகரிக்க வேண்டும். காலனித்துவ மற்றும் சுதேச விரோதக் கட்சிகளும், அமைப்புக்களும் இணைந்து இலங்கையையும் லிபியாவாகவோ அல்லது சிரியாவாகவோ மாற்ற முயற்சிக்கின்றன. தேசவிரோத சக்திகள் பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியத்தை கைபொம்மையாக பயன்படுத்திக் கொண்டுள்ளன.

ஆளும்கட்சி இலவசக் கல்வி முறைமைக்கு குந்தகம் ஏற்படுத்தாது என நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். பல்கலைக்கழக பேராசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டத்தைக் கண்டிக்கும் நோக்கில் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார். (ந-11)

# காணாமல் போனோர்...

யாடும் போதே அவர்கள் இவ் வாறு தெரிவித்துள்ளனர்.

யுத்தம் நிறைவடைந்த நேரம் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள் தொடர்பாக தகவல்கள் தெரியாமல் நீண்ட காலமாக பெரும் மன உளைச்சலுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றோம்.

மாதத்திற்கு ஒரு தடவை புலனாய்வாளர்களும் பொலிஸாரும் காணாமல் போயுள்ள எமது பிள்ளைகள் தொடர்பான விபரங்களை திரட்டி வருகின்றனர். அப்படி என்றால் எங்கள் பிள்ளைகள் அரசின் கட்டுப்பாட்டில் தான் இருக்க வேண்டும்.

அவ்வாறென்றால் அரசாங்கம் அவர்களை தடுத்து வைத்திருக்கும் இடத்தை எமக்கு சொல்ல வேண்டும். எமது பிள்ளைகள் கண் இல்லாமல் கால் கையில்லாமல் இருந்தாலும் பரவாயில்லை எமது பிள்ளைகள் எமக்கு வேண்டும் என்று அவர்கள் கண்ணீர் மல்க தெரிவித்தனர்.

நான்கு வருடங்களுக்கு மேலாக எமது பிள்ளைகள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகளை செய்து வந்தபோதும் எவ்விதமான பலனும் எமக்கு கிடைக்கவில்லை. இதற்காக பல போராட்டங்களும் நடத்திவிட்டோம்.

இன்று (நேற்று) நாம் கலந்து கொள்ளும் இறுதிப் போராட்டம் இதுவாக இருக்கும் இந்த போராட்டத்திலும் எமக்கு ஒரு நியாயம் கிடைக்காவிட்டால் எமது பிள்ளைகள் கிடைக்கும் வரை சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளவுள்ளோம் என்று பெற்றோர் குறிப்பிட்டனர்.

அத்துடன் அரசாங்கம் கிளிநொச்சியில் வீதி அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. வீதி அபிவிருத்தி எம்மைச் சாகடிப்பதற்கே மேற்கொள்ளப்படுகின்றது. எமக்கு அபிவிருத்தி தேவையில்லை. எமது பிள்ளைகளை தாருங்கள் என்று அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கு பதிலளித்த மனோ கணேசன் விரைவில் தடுப்பில் உள்ளவர்களின் பெயர் விபரங்களை வெளியிடுவதற்கும் காணாமல் போனவர்கள் பற்றிய நிலைப்பாட்டை அறியவும் நடவடிக்கை எடுப்பதாக உறுதி மொழி வழங்கினார். (ந-11)

# கல்வி அமைச்...

ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்க் கும் பொருட்டே திறமையுள்ளவரும் சகோதரருமான பசிலை கல்வியமைச் சராக நியமிப்பதே சிறந்த வழியென ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய நிலையில் அரசாங்கத்திற்கு பெரும் தலையிடியைக் கொடுத்துள்ள பல்கலைக்கழக மாணவர்களதும் விரிவுரையாளர்களதும் போராட்டங்கள் உச்ச நிலையை எட்டியுள்ள நிலையில் இந்த அமைச்சு மாற்றம் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

# இலங்கைக்கு...

காக 232 மெற்றிக்தொன் ரின் மீன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால், வடமாகாணத்திலுள்ள 156, 600 மாணவர்கள் நன்மையடையவுள்ளனர். ஜப்பானிய அரசின் சார்பாக இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிதொ ஹொபொ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் இந்த ரின் மீன்களை கையளித்தார். இந் நிகழ்வில் உலக உணவுத்திட்ட பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர். (ந-11)


வேலைவாய்ப்பு தேடுபவர்களின் கவனத்திற்கு!
புதியதுறை ,புதிய அனுபவம்,
திறமை அடிப்படையில் தொழில்.
கவர்ச்சியான சம்பளம்
எதிர்வரும் 3ம் திகதி யாழ்நகரில் காலை 10.30க்கு ஆரம்பம்
இலக்கம் 72,பலாலிவீதி, இலுப்பையடி சந்தி,யாழ்ப்பாணம்.
(சி-1172)

Dubai நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு
(Ras - AL Kaima Company Dubai)
அதியுயர் சம்பளத்துடன் Ceramic Packing வேலை செய்வதற்கு உடனடியாக துடிப்புள்ள வேலையாட்கள் தேவை. வடபுல நண்பர்களே! அதி உயர் சம்பளத்துடன் நீங்களும் வெளிநாடு சென்றுவர அரிய சந்தர்ப்பம். (சாப்பாடு+தங்குமிடம், மருத்துவம் இலவசம்) இரண்டே வாரத்தில் பயணம் (Country - Dubai) (Work - Ceramic Packing) (Age Limite - 22 - 40)
விரையுங்கள்
LANKA VOICE, 24 Station Road, Vavuniya
0750650084
(C-1158)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org